Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 28

வெள்ளிக்கிழமை 24 டிசெம்பர் 2021

மார்கழி 09 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 554
மொத்தம் 582,149

**உயிரிழப்பு**
நேற்று 21
மொத்தம் 14,832

## இலங்கையெங்கும் 2022 இல்
# பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படுவது நிச்சயம்!

துறைசார் பேராசிரியரும் , அமைச்சரும் அபாய அறிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 24
2022 இல் நாட்டில் உணவுக்குப் பஞ்சம் ஏற்படுமென முன்னாள் விவசாயத்துறை அமைச்சரும், தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ள நிலையில், விவசாயத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் பேராசிரியர் உதித் கே ஜயசிங்கவும் இந்த விடயத்தை உறுதிசெய்துள்ளார். 15

## எந்தக் கட்சியோடும் கூட்டணி இல்லை!

அடித்துச் சொல்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ. 24
"இலங்கையை ஆட்சி செய்து, நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு சென்ற பிரதான கட்சிகளுடன் எமக்கு அரசியல் 'டீல்' கிடையாது. அந்தக்கட்சிகளுடன் இணைந்து கூட்டணி அமைக்கமாட்டோம். எனினும், மேற்படி கட்சிகளுக்கு ஆதரவு வழங்கும் மக்கள் 15

## அழைத்தால் வருவோம்!

தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்தில் பங்கேற்க இ.தொ.கா. பச்சைக்கொடி

கொழும்பு, டிசெ. 24
"தமிழ் பேசும் கட்சிகளின் சங்கமத்தில் பொதுநலன் இருப்பின், அதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் பங்குபற்றும். அதற்கான அழைப்பை சாதகமாக பரிசீலிக்கும்" என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க 15

## விலையை அதிகரிக்காதே!

வலி. மேற்கு பிரதேசசபையினர் போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ. 24
தற்போது நிலவுகின்ற பொருள்களின் விலைவாசி அதிகரிப்புக்கு எதிராக வலி. மேற்கு பிரதேச சபைக்கு வெளியே, சபையின் உறுப்பினர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வலி. மேற்கு பிரதேச சபையின் 46ஆவது அமர்வு உப 15

சில வாரங்களில் 5ஆவது சம்பவம்

## இன்னொரு பிள்ளையாரும் தெல்லிப்பழையில் மாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 24
தெல்லிப்பழையில் நேற்றும் ஒரு கோவிலில் பிள்ளையார் விக்கிரகம் காணாமற்போயுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தெல்லிப்பழை 15

## மருத்துவர் சங்கத்துக்கு நிபுணர் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ. 24
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு, விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.
"சேவைகளுக்கான தேவைகளின் 15

### முச்சந்தி முரளி



"முழுமுதற் கடவுளுக்கே பாதுகாப்பில்லாத நாட்டில சாதாரண சனத்துக்கு மட்டும் பாதுகாப்பு இருக்குமோ எண்டு சொல்லுங்கோ"

## 100 வருடங்களின் பின்னர் யாழில் அதிகூடிய மழை!

மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் தகவல்



யாழ்ப்பாணம், டிசெ. 24
யாழ்ப்பாணத்தில், 100 வருடங்களுக்குப் பின்னர் 1963.4 மில்லிமீற்றர் என்ற அதிகூடிய மழைவீழ்ச்சி இந்த வருடம் பதிவாகியுள்ளது என்று. 15

## பூநகரி கணேசா கோவிலில் அகழ்வாராய்வு ஆரம்பம்



கிளிநொச்சி, டிசெ. 24
வரலாற்றுத் தொன்மைவாய்ந்த பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கௌதாரிமுனை கணேசா கோவிலில், தொல்லியல் திணைக்களத்தால் அகழ்வாராய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
குறித்த கோவிலில் வரலாற்றுத் தொன்மையான சான்றுகள் இருக்கக்கூடும் 15

## கிணற்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24
ஊர்காவற்றுறைமேற்கு, கயித்தம்புலம் பகுதியில், கிணற்றிலிருந்து இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதே பகுதியைச் சேர்ந்த கனகசபை ஜெனிஸ்டன் (வயது - 21) என்பவரே இவ்வாறு சடலமாக 15

இந்திய மீனவர்களின்

## அத்துமீறலைக் கண்டித்து இன்று முற்றுகைப் போர்

கொழும்பு, டிசெ.24
இந்திய இழுவைப்படகு மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து, யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம் இன்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தவுள்ளது.
(விரிவு 7ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுகின்ற கதை!!!

## சீனாவின் தமிழ் மக்கள் மீதான கரிசனையை சாடுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்



**யாழ்ப்பாணம், டிசெ. 24**

**தமிழ் மக்களுக்கு இதுவரையில் எந்தவொரு உதவிகளையும் வழங்காத சீனா, இப்போது இந்தியாவைச் சீண்டுவதற்காக வடக்கு - கிழக்கு மண்ணில் காலடி பதிக்கின்றது. இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது - என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் முக்கியமாகக் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் நடந்த காலகட்டத்தில் நாங்கள் சீனாவுடன் பேசியபொழுது, 'நாங்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகளை வைத்துக்கொள்வோமே தவிர, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடமாட்டோம் என்று கூறினார்கள். அதுமாத்திரமல்லாமல், தமிழ் மக்கள் போர்க் குற்றங்களுக்கும் இனப்படுகொலைகளுக்கும் எதிராக உலக நாடுகளிடம் நீதி கேட்டு சர்வதேச மன்றங்களை அணுகியபோது, அங்கும் தமிழ் மக்களுக்கு எதிராகவும் அவர்களது கோரிக்கைகளுக்கு எதிராகவும் செயற்பட்டு இலங்கை அரசைக் காப்பாற்றி வந்தார்கள்.

இப்பொழுது, தமிழ் மக்கள்மேல் பரிவுகொண்டவர்கள் போல் நடித்து, மீனவர்களுக்கு உதவி செய்கின்ற போர்வையில், ஒரு தொகுதி வலைகளையும் உலர் உணவுகளையும் கொடுத்த நாடகத்தையும் நாங்கள் அண்மையில் பார்த்தோம். வடக்கு மாகாணத்தில் அவர்களது பிரசன்னம் என்பது இந்தியாவைச் சீண்டுவதைத் தவிர வேறெதுவும் இல்லை என்பதை நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணம் என்பது இந்தியாவுக்கு கூப்பிடுதொலைவிலுள்ள ஒரு பிரதேசம். இங்கு சீனர்களின் பிரசன்னம் என்பதோ, முதலீடுகள் என்பதோ இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகங்களை ஏற்படுத்தும் என்பது சாதாரண அரசியல் மாணவனும் புரிந்துகொள்ளக்கூடிய விடயம்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், வடமாகாணத்தில் ஏற்படுத்தப்படும் முதலீடுகளுக்கு இலங்கை - சீனாவுக்கு இடமளிப்பதென்பது அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. கலாசார ரீதியாக, மொழி ரீதியாக, சமய ரீதியாக பல ஆயிரம் ஆண்டுகள் தொடர்புடையவர்கள் இலங்கை - இந்திய மக்கள். குறிப்பாக எமக்கு மிகவும் அண்மித்த பிரதேசமான தமிழகத்தில் எட்டுக் கோடி தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆகவே இந்தியாவுக்கு எதிராக வடக்கு மாகாண மண்ணை சீனா போன்ற நாடுகள் பாவிப்பதற்கு எந்தவிதத்திலும் அனுமதி அளிக்க முடியாது.

உலக நாடுகளின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை நிராகரித்துக்கொண்டு, தனது நாட்டில் வாழுகின்ற இஸ்லாமிய சமூகத்தினரின் மனித உரிமைகள் அனைத்தும் மறுதலிக்கப்பட்டு அடிமைகளைவிடவும் கேவலமாக நடத்திக்கொண்டும் வறுமைப்பட்ட நாடுகளைக் கடனாளிகளாக்கி தமது கைப்பிடிக்குள் கொண்டுவரும் கேவலமான கொள்கையையும் கைவிட்டு அதன் பிறகு ஏனைய நாட்டு மக்கள்மீது அக்கறை செலுத்துவது குறித்து சீனா சிந்திக்க வேண்டும்- என்றுள்ளது. (ஒ-5)



## இந்திய மீனவர்களின் கைது சீனாவைச் சாந்தப்படுத்தவா?

### *பின்னணி என்ன என்று கேட்கின்றார் மன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்*

மன்னார், டிசெ. 24

கடந்த காலங்களில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையை எதிர்த்துப் பெரும் ஆர்ப்பாட்டங்களைச் செய்திருக்கின்றோம். கையெழுத்துக்களைப்பெற்று அரசுக்கு எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளோம். ஆனால் அப்போதெல்லாம் இந்திய மீனவர்களைக் கைதுசெய்யாத அரசு, சீனத் தூதுவரின் வருகையின் பின்னர் இவ்வாறு கைது நடவடிக்கையில் ஈடுபட்டதற்கான காரணம் என்ன? என்று மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் முகமட் ஆலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்திய இழுவைப் படகுகள் மற்றும் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். இந்த விடயம் இலங்கையை விட பிரபலமாக இந்தியாவில் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. சீனத் தூதுவர் இங்கு வந்ததற்கான காரணம் என்னவென்றுகூட எமக்கு இன்னும் தெரியவில்லை. தற்போது இந்திய மீனவர்களின் கைது யாரைத் திருப்திபடுத்துவதற்காக? மீனவர்களை கைதுசெய்து பின் விடுதலை செய்து இந்தியாவைச் சாந்தப்படுத்துவதற்காகவா? அல்லது அவர்களைக் கைதுசெய்து வடபகுதி மீனவர்களைச் சாந்தப்படுத்துவதற்காகவா? அல்லது தொடர்ச்சியாக எல்லைமீறும் இந்திய மீனவர்களைக் கைது செய்து படகுகளைப் பறிமுதல் செய்வோம் என்று சீனாவை திருப்திப்படுத்தவா?. எது எப்படியோ, இந்தக் கைது உண்மையாக இடம்பெற்றிருக்குமாக இருந்தால் எமது வடமாகாண மீனவர்களும் இதைத்தான் எதிர்பார்த்தார்கள் - என்றார். (ம-213)



## கிளிநொச்சிச் சந்தையில் சுகாதார நடைமுறை அவுட்

கிளிநொச்சி, டிசெ. 24

கிளிநொச்சிச் சந்தைப்பகுதியில் பொதுமக்களும் வர்த்தகர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல், வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலமான இக்காலத்தில் பொது மக்கள் அதிகளவில் ஒன்றுகூடுவதற்கு வாய்ப்பு உள்ள காரணத்தால் அடுத்தடுத்த வாரங்களில் கொரோனாப் பெருந்தொற்றுக் கொத்தணிகள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் இதைத் தவிர்ப்பதற்கு மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. எனினும் கிளிநொச்சி சந்தைப் பகுதியில் இந்தச் சுகாதார நடைமுறைகள் இல்லாமல் வியாபாரம் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. (ம-113)

## தரமற்ற நெய் விற்பனை வர்த்தக நிலையம் முற்றுகை

யாழ்ப்பாணம், டிசெ. 24

வண்ணார்பண்ணை பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தரமற்ற நெய் விற்கப்பட்டமை சுகாதாரப் பகுதியினரால் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கே.உதயபாலா தலைமையில் சென்ற சுகாதாரப் பிரிவினர் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையத்தில் சோதனை நடத்தினார்கள். அங்கே இருந்த நெய்ப் போத்தல்களை மீட்டு சுகாதாரப் பிரிவினர் அதன் மாதிரிகளை அரச பகுப்பாய்வுக்கு சோதனைக்காக அனுப்பிவைத்திருந்தனர்.

இந்த நெய்யில் கலப்படம் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து குறித்த வர்த்தக நிலையத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ம-17)



முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பொருண்மியம் நலிந்த குடும்பங்களைச்சேர்ந்த பத்து மாணவர்களுக்கு சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் 'நிசான் டிஜிற்றல்' உரிமையாளரும், மேற்குறித்த வித்தியாலய பழைய மாணவனுமாகிய நிசானின் நிதியில் துவிச்சக்கர வண்டி 22ஆம் திகதி புதன்கிழமை வழங்கப்பட்டன. (ய-159)



சர்வதேச மாற்று வலுவுடையோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சிதெற்கு, வடக்கு வலயக்கல்வி அலுவலகங்களின் ஏற்பாட்டில், 2021 ஆம் ஆண்டுக்கான தொழிற்பயிற்சி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது, போட்டிகளில் பங்கு பற்றிய ஆசிரியர்கள், மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில், கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன், இளைஞர் விவகார அமைச்சின் உதவிச் செயலர் சு.சிவப்பிரியா, மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.விஷ்ணுகரன் உட்பட பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மருத்துவர்களின் போராட்டம் மக்களையே பாதிக்கின்றது!

## தனிநபரால் கவனவீர்ப்பு

**வவுனியா, டிசெ. 24**

**மருத்துவர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தால் மக்கள் பாதிக்கப் படுகின்றனர் என்று தெரிவித்து மௌலவி ஒருவர் கவனவீர்ப்பில் ஈடு பட்டுள்ளார்.**

குறித்த மௌலவி தனது மக ளுக்கு சிகிச்சை பெற்றுக்கொள் வதற்காக வவுனியா மருத்துவம னைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது பணிப்புறக்கணிப்பு முடிவடைந்த பின்னரே அந்தச் சிகிச்சையை வழங்கமுடியும் என்று மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் விரக்தியடைந்த அவர் மருத்துவமனை வளாகத்தில் தனிநபராக கவனவீர்ப்பில் ஈடு பட்டார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

மருத்துவர்களின் தொடர் பணிப் புறக்கணிப்பால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்துவருகின்றனர். குறிப் பாக மாதாந்த சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளும் பல்வேறு நோயாளர்கள் தூரப்பிரதே சத்தில் இருந்து வருகைதந்து ஏமாற்றத்துடன் திரும்பிச்செல் கின்றனர். தொடர்ச்சியாக மூன் றாவது நாளாகவும் இந்தப் புறக் கணிப்புத் தொடர்கின்றது. மருத் துவர்கள் தங்களது உரிமையின் அடிப்படையில் இதனைச் செய் கின்றார்கள். ஆனால் பாதிக்கப் படும் பொதுமக்களுக்கு யார் பதில் சொல்வது? மூன்று நாள் களாக வேலைநிறுத்தம் செய்கி றோம். நோயாளர்களே மருத்து வமனைக்கு வரவேண்டாம் என்று அறிக்கையையாவது விடுகின்றீர்களா? அப்படிச் சொல் லுங்கள் நோயாளிகள் வீடுகளி லேயே சாகட்டும்.

இந்தநாட்டில் ஏற்படுகின்ற பிரச் சினைகளுக்கு ஜனாதிபதியே பதில் சொல்லவேண்டும்-என் றார். (ம-110)



# கொக்குவிலில் வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட வராஹி அம்மன் கோவில் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை 5 மணியளவில் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. வீட்டின் உரிமையாள ரும் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளார். இது குறித்து மேலும் தெரியவருவ தாவது

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கொக்குவில் பகுதியில் வராஹி அம்மன் வீதியில் அமைந்துள்ள குறித்த வீட்டுக்குள் அத்துமீறி உள் நுழைந்த 10 பேர் கொண்ட கும்பல் மேற்படி தாக்குதலை நடத்தியுள் ளது.

அத்துடன் வீட்டு உரிமையாளர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது. அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-125)

# 1,500 கொள்கலன்கள் கொழும்பில் தேக்கம்!

கொழும்பு, டிசெ. 24

அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட கொள்கலன்கள் கொழும்பு துறை முகத்தில் தேங்கியுள்ளன என்று அத்தியாவசியப் பொருள் கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக குறித்த கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அந்த சங்கத்தின் பேச் சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அரிசி, சீனி, பருப்பு, கடலை, வெள்ளைப்பூண்டு உள் ளிட்ட மேலும் பல அத்தியாவசியப் பொருள்கள் குறித்த கொள்கலன்களில் அடங்கியுள்ளன.

அவற்றை விடுவிப்பதற்குத் தேவையான டொலரை வழங்குமாறு மத்திய வங்கியிடம் தற்போது கோரியுள் ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# லாப் காஸ் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 24




இலங்கை தர நிர்ணய நிறுவனம் மற்றும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் பரிந்துரைகளுக்கு அமைய நேற்று முதல் மீண்டும் லாப் காஸ் விநியோகம் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

உரிய பரிந்துரைகளுக்கு அமைய அம் பாந்தோட்டை முனையத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட உள்நாட்டு எரிவாயுத் தொகையே இவ் வாறு விநியோகிக்கப்படும் என லாப் காஸ் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# கோண்டாவிலில் வீடொன்றில் வன்முறைக்கும்பல் அடாவடி

யாழ்ப்பாணம், டிசெ. 24

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்துக்கு அண் மையாக உள்ள வர்த்தகரின் வீட்டுக்குள் புகுந்த கும்பல் ஒன்று அட்டூழியத்தில் ஈடுபட் டுள்ளது. இது தொடர்பில் கோப் பாய் பொலிஸாரிடத்தில் முறை யிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவரு வதாவது:

புன்னாலைக்கட்டுவன் சந்தி யில் அலைபேசி வர்த்தக நிலையத்தை நடத்திவரும் குறித்த வர்த்தகரின் வீட்டுக்குள் நேற்றுக்காலை 5.15 மணிய ளவில் புகுந்த கும்பல், அங்கு பல்வேறு அட்டூழியங்களில் ஈடுபட்டுள்ளது.

அத்துடன் மோட்டார் சைக்கிளை எடுத்துச்சென்று சந்தியில் கை விட்டுவிட்டுத் தப்பியோடியுள் ளது.

மூன்று மோட்டார் சைக்கிள்களி லும் ஒரு முச்சக்கர வண்டியி லும் வந்த கும்பலே இந்த அத்துமீறலில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-26)

**வ**ழக்கம்போல நேற்றும் அந்த சபையின்ர தவிசாளருக்கு மீட்டிங் காய்ச்சல் வந்திட்டு. அதால அவர் கூட்டத்துக்கு வரேலை. தவிசாளர் இல்லாததால உப தவிசாளரே கூட்டத்தை நடத்த வேண்டியதாப் போச்சு. நாட்டில எல்லாச் சாமானும் கண்டபடி விலையேறுறதைக் கண்டிச்சு ஒரு எதி ர்ப்புப் போராட்டம் செய்ய முக்கால்வாசி உறுப்பினர் மார் யோசிச்சினம். அதை ஒரு பிரேரணையாக் கொண்டந்து நிறைவேற்றிப்போட்டு, கூட்டத்துக்கு தலைமை தாங்கின உபதவிசாளருக்கும் இதைப் பற்றிச் சொல்லிட்டு, "போராட்டத்தை முடிச்சுக் கொண்டு கூட்டத்துக்கு வாறம்" எண்டிட்டு, போராட் டத்துக்கு பதாகையளோட போட்டினம்.

ஆனால், அரசோடிக் கட்சியளைச் சேர்ந்த மெம் பர்மார் போராட்டத்துக்கு போகேலை. எப்பிடிப் போவினம்? அவையின்ர கட்சியள் முண்டு குடுக்கிற அரசாங்கத்துக்கு எதிராயெல்லோ போராட்டம். அதில கலந்துகொண்டால் பிறகு கட்சியை விட்டே கலைச்சிடுவினம் எல்லோ. அதால பிடிச்சுவைச்ச பிள்ளையார் மாதிரி அவை இருந்ததால, கூட்டத்துக்கு தலைமை தாங்கின உப தவிசாளரும் இன்னோரு உறுப்பினரும் போராட்டத்துக்கு போகேலாமல் இருந்திச்சு. அப்ப ஒரு அரசோடிக் கட்சி உறுப்பினர் "அவை போனால் போகட்டும் நீங்கள் சபையைநடத்துங்கோ" எண்டு வாயைத் திறக்க, அங்க இருந்த மிச்ச நாலுபேரும் அதுக்கு ஆமா போட்டிச்சினம். ஆனாலும் அப்பிடிச் செய்யஏலாது எண்டு உபதவிசாளர் சொல்லிட்டார். எண்டாலும் இருக்கிறவை அடங்கிறபாடா யில்லை. சபையை நடத்தத்தான் வேணும் எண்டு விடாப்பிடியா நிண்டிருக்கினம். உப தவிசாளருக்கு என்ன செய்யிறதெண்டு தெரியாமப் போச்சுது. சப்போர்ட்டுக்கு அவரின்ர கட்சியில ஒரேயொரு ஆள் மட்டும்தான் அப்ப சபையில இருந்தவர். மற் றவை எல்லாரும் ஆர்ப்பாட்டத்துக்கு போட்டினம். அதால சபையில இருக்கிறவையின்ர ஆய்க்கினை தாங்கஏலாமல், "மறுஅறிவித்தல்வரை சபையை ஒத்திவைக்கிறன்" எண்டு சொல்லிப்போட்டு போராட்டத்துக்கு போட்டார். அவ்வளவுதான், இதுக்காண்டித்தான் இவ்வளவு நேரமும் வெய்ட் பண்ணின ஆக்கள் மாதிரி, அதுமட்டும் சபைக்குள்ள குந்தி இருந்த அரசோடிக் கட்சிக்காரர் எல்லாரும் வீட்டை வெளிக்கிட்டுப் போட்டினம்.

இதொண்டும் ஆர்ப்பாட்டம் செய்த மெம்பர்மார் ஒருத்தருக்கும் தெரியாது. அவை போராட்டத்தை முடிச்சுப் போட்டு, திரும்ப சபை அமர்வுக்கெண்டு வந்திருக்கினம். அப்பதான் அவைக்கு மறு அறிவித்தல்வரை சபையை ஒத்திவைச்ச விசயம் தெரியவந்திருக்கு.

"அதெப்பிடி நாங்கள் தானே பெரும்பான்மை? அவை வெறும் அஞ்சுபேர். அவைக்காக சபையை எப்பிடி ஒத்திவைக்கலாம்? இண்டைக்கு 6 மணி எண்டாலும் சபையை கூட்டத்தான் வேணும்" எண்டு குழம்பத் தொடங்கிட்டினம். பிறகு ஒருமாதிரி அவையை உப தவிசாளர் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அனுப்பிவைக்க பெரும்பாடுபடவேண்டியதாப் போச்சு.

இப்பிடி 46ஆவது தரமும் சிறப்பா, குழப்பமா அந்தச் சபையின்ர அமர்வு முடிஞ்சுதாம்.

குழப்பத்தின்ர மறுபேரே அந்தச் சபைதான் போல.....!



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று அரசதலைவராக சஜித்! இந்தியா, சீனாவும் அங்கீகாரம்!

## நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டம் விரைவில் முன்வைக்கப்படும் என அறிவிப்பு

கொழும்பு, டிசெ.24

**இந்தியா, சீனா உள்ளிட்ட உலகநாடுகள் இலங்கையில் மாற்று அரசாக ஐக்கிய மக்கள் சக்தியையும், மாற்று அரச தலைவராக சஜித் பிரேமதாஸவையும் ஏற்றுக்கொண்டுள்ளன. அதனால்தான் சீனா சஜித்துக்கு உதவுகிறது. இந்தியாவும் அவருடன் பேச்சு நடத்துகின்றது - என்று பிரதான எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உபசெயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அசோக அபேசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்த அரசுமீது உலக நாடுகளுக்கு நம்பிக்கை இல்லை. அதனால்தான் கடன்வழங்குவதற்கு நாடுகள் முன்வர மறுக்கின்றன. நிதி தொடர்பான தரவுப் பட்டியல்களில் எமதுநாடு தொடர்ச்சியாக பின்னிலைப்படுத்தப்படுகின்றது. இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும்.

உலக நாடுகள் ஐக்கிய மக்கள் சக்தி மீது நம்பிக்கை வைத்து அதை மாற்று அரசாகவும், அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவை மாற்று அரச தலைவராகவும் ஏற்றுவருகின்றன. அதனால்தான் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கோரிக்கையை ஏற்று 20 மில்லியன் ரூபா நன்கொடையை சீனா வழங்கியது. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியா சென்று கடன் கேட்டார். அதனை வழங்கலாமா அல்லது இல்லையா என்பது தொடர்பில் அந்த நாட்டு உயர்மட்ட அதிகாரிகள் சஜித்தை தொடர்புகொண்டு கேட்கின்றனர். அதாவது உலக நாடுகள் மாற்றுத் தலைவராக சஜித்தை ஏற்றுள்ளன என்பதையே இது வெளிப்படுத்துகின்றது. இது தெளிவாக புரிகின்றது. சஜித் பிரேமதாஸ மனிதநேயமிக்க தலைவர். அதனால்தான் எதிரணியில் இருக்கும்போதும் மக்களுக்கு உதவுகின்றார். நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. சகல துறைகளையும் உள்ளடக்கிய தீர்வுத் திட்டம் விரைவில் முன்வைக்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன.- என்றார். (எ-44)



# நேற்றும் வெடித்தது எரிவாயு அடுப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.24

மானிப்பாய், உடுவில்வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று எரிவாயு அடுப்பு வெடிப்பு ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்றுக்காலை 9 மணிக்கு காலை உணவு தயாரித்தபோது எரிவாயு அடுப்பு வெடித்தது என்று கூறப்படுகின்றது. இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-125)

# 3 பில்லியன் அமெ. டொலர் ஆண்டிறுதியில் கையிருப்பு

## இலங்கை மத்திய வங்கி நம்பிக்கை

கொழும்பு, டிசெ.24

2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் உத்தியோகபூர்வ கையிருப்பு 3 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் இருக்கும் என இலங்கை மத்திய வங்கி எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

2021 இறுதியளவில் அலுவல்சார் ஒதுக்குகள் அமெரிக்க டொலர் 3 பில்லியனுக்கும் மேலாகக் காணப்படுவதைஉறுதிப்படுத்தும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கத்தின் பின்னர் ஏற்பட்ட சிக்கல்களுக்கும் வெளிநாட்டுத்துறையின் பாதகமான அபிவிருத்திகளால் ஏற்படுத்தப்பட்ட சவால்களுக்கும் மத்தியில் இலங்கைப் பொருளாதாரம் 2021 ஆண்டு முழுவதும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையைக் காண்பித்தது.

குறுங்காலத்தில் அநேகமான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மத்திய கிழக்கு மற்றும் ஏனைய எதிர்பார்க்கப்பட்ட உட்பாய்ச்சல்கள் பொருண்மியமாவதுடன் ஒதுக்கு நிலைமையானது 2022 ஆம் ஆண்டு முழுவதிலும் போதியளவு மட்டங்களில் காணப்படும் என்று அரசும், மத்திய வங்கியும் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளன. - என்றுள்ளது. (எ-இ)



# கர்ப்பிணித் தாய்மாருக்கு பொருள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.24

52 ஆவது காலாட்படைப் பிரிவுக்குட்பட்ட 522 ஆவது காலாட்படைப் பிரிவின்கீழ் அமைந்துள்ள 7ஆவது கஜபா படையணியின் 31ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு 31 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் யாபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், 52ஆவது காலாட்படைத் தளபதி, 522ஆவது காலாட்படைத் தளபதி, இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள், அரச அதிகாரிகள், இராணுவத்தினர் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-ரி1)

# நீதிமன்ற வழக்கு தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாணம், டிசெ.24

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து வடமாகாண மேல் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள் யாவும் வழமை போல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வழக்குடன் தொடர்புடையோர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-ரி1)

# மணல் அகழ்வால் பெரும் அபாயம்!

## மன்னார் ஆயர் ஆதங்கம்

மன்னாரில் இடம்பெறும் அத்துமீறிய மணல் அகழ்வால் பெரும் ஆபத்தான நிலை ஏற்படும் அபாயம் உள்ளது. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார் யாழ். மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை.

மன்னார் பிரஜைகள் குழுவின் அங்கத்தவர்கள் வருட இறுதி ஒன்றுகூடல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் ஆஹாஸ் விடுதியில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்தப் பிரஜைகள் குழுவானது மக்களுக்காகவே உருவாக்கப்பட்டது. இந்தக் காலக்கட்டத்தில் மக்கள் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இரண்டு வருடங்களாக மக்கள் கொடிய நோயான கொரோனாவால மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இருந்தும் சுகாதாரப் பகுதியினர் மன்னாரில் சரியான பாதையில் சென்று மக்களுக்கான சுகாதார நடைமுறைகளை முன்னெடுத்து வருவதால் பெரும் பாதிப்புக்கள் இல்லாது மக்கள் காப்பாற்றப்படுவதையிட்டு நாம் சுகாதாரப் பகுதினருக்கு நன்றி தெரிவித்து நிற்கின்றோம்.

அத்துடன் தொடர்ந்து மக்கள் மத்தியில் இவ்விடயமாக விழிப்புணர்வை நாம் தொடர்ந்துகொண்டுவரவேண்டும். எதிர்காலத்தில் மக்கள் இன்னும் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகும் நிலையும் காணப்படுகின்றது.

மண் அகழ்வு மன்னாரில் தற்போது தீவிரமாக இடம்பெற்றுவருகின்றது. எண்ணெயை தேடிச்செல்வதாகத் தெரிவித்து இங்குள்ள மணலை வெளிநாடுகளுக்கு எடுத்துச்செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக மன்னார் பிரஜைகள் குழுவானது காட்டும் அக்கறைக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் நாம் அனைவரும் ஓரணியில் நின்று பிரஜைகள் குழுவைப் பலப்படுத்த வேண்டும் - என்றார். (ம-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் 2,316 குடியிருப்புக்கள் தரிசிப்பு!



கோண்டாவிலிலுள்ள சி.சி.த.க பாடசாலைக்கு குடிதண்ணீர் வசதியும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் அப்பகுதியில் வசிக்கும் 26 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் 'பூமணி அம்மா' அறக்கட்டளையின் தலைவர் நா.தனேந்திரன் தலைமையில் வழங்கப்பட்டன. (ரி1)

யாழ்ப்பாணம், டிசெ.24

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தின்போது யாழ்ப்பாணம் மாநகரப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 316 குடியிருப்புக்கள் தரிசிக்கப்பட்டன - என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தத் தரிசிப்புக்களின் போது, ஆயிரத்து 11 குடியிருப்புக்கள் நுளம்பு பரவக் கூடிய ஏதுநிலைகளுடன் காணப்பட்டுள்ளன. அந்தக் குடியிருப்புக்களை உடனடியாகத் துப்புரவாக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

64 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டுள்ளன. அவை உடனடியாக அழிக்கப்பட்டன. 44 குடியிருப்புக்கள் போதிய சுகாதார வசதிகள் இன்றிக் காணப்பட்டன. அவற்றுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அதேவேளை, தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஜனவரி 6ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-17)



புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பொது நோக்கு மண்டபத்தில் கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்ட சுத்திகரிப்பு குடிதண்ணீர்த் திட்டம் மக்களிடம் கையளிக்கப்பட்டது. இலங்கைக் கடற்படையின் தொழில்நுட்பம் மற்றும் மனிதவள பங்களிப்புடன் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் ஏற்பாட்டில், 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டது. (ஒ-ரி1-19)

# 5 ஆண்டுகள் கடந்தபோதும் நிரந்தர நியமனம் இல்லை!

## டெங்கு களத் தடுப்பு உதவியாளர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.24

சுகாதாரக் சேவைகள் திணைக்களத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட டெங்கு களத்தடுப்பு உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டு, 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு டெங்குத் தொற்று தீவிரமடைந்திருந்தபோது, டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களிலும் டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் சுகாதார அலுவலர்களுடன் இணைந்தும், குழுவாகவும் வீடுகளுக்குச் சென்று டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு வேதனம் வழங்கப்படுகின்றது என்றும், டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக பல இடங்களுக்குச் செல்ல நேரிட்டாலும், போக்குவரத்துப் படிகள் வழங்கப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நியமனம் வழங்கப்பட்டு, தற்போது 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இன்னமும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்றும், நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-9)

# உரத்துக்கான கொடுப்பனவு 6ஆம் திகதி முடிவு தெரியும்!

கொழும்பு, டிசெ.24

சீன உர நிறுவனத்துக்குப் பணம் செலுத்துவதற்கான தடையை நீக்குவதா? அல்லது நீடிப்பதா? என்பது தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாதம் 6ஆம் திகதி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் அறிவிக்கும் என்று கூறப்படுகின்றது.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரத்தில் தீங்கு விளைவிக்கும் பக்ரீறியாக்கள் உள்ளன என்பது ஆய்வுகளில் கண்டறியப்பட்டதை அடுத்து, உர இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது.

உரக் கொள்வனவுக்கான பணத்தை வழங்குவதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியிருந்தது.

இந்த நிலையில் இது தொடர்பான முடிவு எதிர்வரும் 6ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, இலங்கையால் தடை செய்யப்பட்ட உரத்தில் எவ்வித தீங்கு விளைவிக்கும் பக்ரீறியாக்களும் இல்லை என்று சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றினால் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

# நைஜீரியாவுடன் ஒப்பந்தம் தவறு

## ஆளுங்கட்சி எம்.பியே போர்க்கொடி

கொழும்பு, டிசெ. 24

'நைஜீரியா நாட்டிலிருந்து மசகு எண்ணெயை பெற்றுக்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவு தவறாகும். அந்த நாட்டு நிறுவனத்திடம் வெளிப்படைத்தன்மை இல்லை' என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளில் 75 வீதமானவை இந்த அரசாலே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பிரச்சினைகளாகும். குறிப்பாக மசகு எண்ணெய் இறக்குமதிக்கான விலைமனுக்கோரல் தொடர்பில் நைஜீரிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அது தொடர்பில் ஆழமாகச் சிந்தித்திருக்க வேண்டும்.

பெற்றோலிய வளத்துறை அமைச்சராக நான் இருந்துள்ளேன். நைஜீரிய நிறுவனத்துடன் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபடமுடியாது என்பதை உணர்ந்தேன். அந்த நாட்டு நிறுவனத்திடம் வெளிப்படைத்தன்மை இல்லை.

எனவே, எந்த அடிப்படையில் ஒப்பந்தத்தை இவர்கள் (அரசு) கைச்சாத்திட்டார்கள் எனத் தெரியவில்லை - என்றார். (ம-44)

# காப்புறுதி இழப்பீடு வழங்கல்

சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலையின் மாணவி கஜிதரன் விதுர்சிகாவுக்கு காப்புறுதி இழப்பீட்டுக் கொடுப்பனவு நேற்று வியாழக்கிழமை அதிபர் ந.ராமதாஸ் தலைமையில் வழங்கப்பட்டது.

மாணவியின் தந்தை அண்மையில் உயிரிழந்தமையால் அவரது இழப்புக்கான சுரக்ஷா மாணவர் காப்புறுதித் தொகையாக 2 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சார்பாக



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன ஆலோசகர் யோகதாரா பிரசன்னா வழங்கினார். (ஒ-ரி1-159)

# ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் நியமனம்!

ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான அமைப்பாளராக, லக்சயன் முத்துக்குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ அவருக்கான நியமனத்தை வழங்கினார். (ஒ-4-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவ ஆராதனை

யாழ்ப்பாணம், டிசெ.24
சண்டிலிப்பாய் ஸ்ரீ மகா சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோயிலில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சிவ ஆராதனை நடைபெறவுள்ளது.
ஆராதனை நிகழ்வுகளாக, ஸ்ரீ வேத உபசாரம், திருமுறை உபசாரம், வீணா வேணு மிருதங்க உபசாரம், நாதஸ்வர உபசாரம், நிருத்த உபசாரம், ஓம் நமசிவாய யந்திரப் பாராயணம் தியானம் ஆகியவை நடைபெறும். (ஒ-ரி1)

# தேயிலை ஏற்றுமதி மூலமாக எண்ணெய்க் கடன் நிவர்த்தி

**கொழும்பு, டிசெ. 24**
**பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஈரான் எண்ணெய் நிறுவனத்துக்கு நீண்டகாலமாக செலுத்தவேண்டியிருந்த 251 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை நிவர்த்தி செய்யும் நோக்கில், தேயிலை ஏற்றுமதி ஒப்பந்தமொன்று கொழும்பில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.**

இந்த ஒப்பந்தம் ஊடாக அந்நியச் செலாவணி சேமிக்கப்படும் அதே வேளை, இந்தக் கடனை ரூபாவில் செலுத்த திட்டமிட்டுள்ளதாகவும் பெருந்தோட்ட அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## எரிபொருளின் விலையை உயர்த்தினால் எவ்வாறு டொலர் இருப்பு அதிகரிக்கும்?

*பிமல் ரத்னாயக்க கேள்வி*



கொழும்பு, டிசெ. 23
உலகச் சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்துள்ள சந்தர்ப்பத்தில் இலங்கையில் விலை உயர்வடைந்துள்ளது. உள்நாட்டில் எரிபொருள் விலையை ரூபாவால் உயர்த்துவதன் மூலம் எவ்வாறு டொலர் கையிருப்பை அதிகரிக்க முடியும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க கேள்வி ஒன்றையெழுப்பினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
2013ஆம் ஆண்டு உலகச் சந்தையில் எரிபொருள் விலை பெரியளவில் உயர்வடைந்திருந்தது. எனினும் இலங்கையில் விலை உயர்த்தப்படவில்லை. ஆனால், தற்போது உலகச் சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள நிலையிலேயே இலங்கையில் விலை உயர்வடைந்துள்ளது. நிதி அமைச்சின் கோரிக்கைக்கு அமையவே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது. உள்நாட்டுப் போர் தீவிரமடைந்திருந்தபோது கூட இவ்வாறான நிலைமை ஏற்படவில்லை. தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பு நியாயமற்றதாகும். இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்கள் இதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது - என்றார். (ம)

## இரு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்

கொழும்பு, டிசெ. 24
விவசாய மற்றும் வெகுசன ஊடக அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் விவசாய அமைச்சின் புதிய செயலாளராக டி.எம்.எல்.டி.பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரான அனுஷ பெல்பிட நியமிக்கப்பட்டுள்ளார்.
கடந்த இரண்டு வருடங்களில் ஐந்து தடவைகள் விவசாய அமைச்சின் செயலர்கள் மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



## வவுனியாவில் தொழிற்சந்தை

வவுனியா, டிசெ.24
மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலக தொழில் நிலையத்தின் ஏற்பாட்டில், மாற்றுத்திறனாளிகளுக்கு தொழிற்சந்தை நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.
இந்தத் தொழிற்சந்தையில், மாற்றுத்திறனாளிகள் பலர் கலந்து கொண்டு பல்வேறு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டனர்.
மாவட்டச் செயலர் சரத் சந்திர தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், உதவி மாவட்டச் செயலர் சபர்ஜா, தனியார் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழிற் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஒ-ரி1-110)

## கிறிஸ்மஸ் கொண்டாட்டம்
# அலங்காரப் பொருள்கள் விற்பனை அமோகம்!

கிறிஸ்மஸ் திருவிழாவுக்கான அலங்காரப் பொருள்களும் இம்முறை அதிகரித்த விலையில் விற்கப்படுகின்றன. வர்த்தகநிலையங்களில் இந்த அலங்காரப் பொருள்களின் விற்பனை தற்போது களைகட்டிக் காணப்படுகின்றது. இருப்பினும் பலரும் ஆர்வத்துடன் பொருள்களைக் கொள்வனவு செய்ததைக் காணக்கூடியதாகவும் இருந்தது. (ம-17)

## கலாசார உறவை மேம்படுத்த இலங்கை – இந்தியா பேச்சு!

கொழும்பு, டிசெ. 24
இந்திய வெளிவிவகார மற்றும் கலாசார இராஜாங்க அமைச்சர் ஸ்ரீமதி மீனகாஷி லேகியை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்த இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு கலாசார உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.
இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் தனித்துவமான பாத்திரங்களை ஆற்றிய இரண்டு வரலாற்றுப் பிரமுகர்களான தேரி சங்கமித்தா மற்றும் இராமாயண சீதை ஆகியோரின் சின்னங்களை மேம்படுத்துவதன்மூலம் இரு அண்டை நாடுகளுக்கிடையிலான கலாசார உறவுகளை மேம்படுத்துவது குறித்து இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.
இலங்கை மற்றும் புதுடில்லி தேசிய அருங்காட்சியகம் மற்றும் நவீன கலைக்கான தேசிய காட்சியகம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கான சாத்தியங்கள் குறித்தும் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இராஜாங்க அமைச்சர் மீனகாஷி லேகிக்கு உயர்ஸ்தானிகர் மொரகொட அழைப்புவிடுத்தார். (ம)



மாதகல் விக்னேஸ்வரா பாடசாலைக்கு, சிறுவர் பூங்கா விளையாட்டு உபகரணங்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்கினார். (ய-27)

# மயக்கமருந்தை விசிறி கொள்ளையிட முயற்சி

*ஜெயந்திபுரத்தில் சம்பவம்*

மட்டக்களப்பு, டிசெ.24
மட்டக்களப்பு, ஜெயந்திபுரத்தில் உள்ள வீடொன்றில் மயக்க மருந்து தெளித்து கொள்ளையிட முயன்ற போதும், அந்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.
இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் தீபாகரன் என்பவரது வீட்டிலேயே இந்தக் கொள்ளை முயற்சி நடந்துள்ளது.
தீபாகரனின் மனைவி வீட்டில் தனித்திருந்தபோது, வீட்டுக்கு வந்த இனந்தெரியாத பெண் ஒருவர், கணவரின் பெயரைக்கூறி அழைத்துள்ளார். சமாதான நீதிவான் கையொப்பம் பெறவந்ததாகவும், அதைப்பெற்று வைக்குமாறும் கோரியுள்ளார். படிவத்தை வாங்க வந்தபோது, அந்த நபர் மயக்க மருந்தை விசிறினார் என்று தெரிவிக்கப்பட்டது. [illegible] வீட்டிலிருந்த பெண் சுதாகரித்துக் கொண்டு, வந்தவரைப் பிடிக்க முயன்றபோது, வீட்டுக்கு வெளியே இருந்து வந்த ஆண் ஒருவர், அந்தப் பெண்ணை இழுத்துச்சென்று மோட்டார் சைக்கிளில் ஏற்றித் தப்பிச் சென்றார் என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, மட்டக்களப்பில் சில தினங்களுக்குமுன்னர் வர்த்தகர் ஒருவரின் மனைவி வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார். அவர் அணிந்திருந்த நகைகளைத் திருடும்நோக்கில், அந்தவீட்டில் பணியில் இருந்த தந்தையும், மகளுமே இந்தக் கொலையைச் செய்திருந்தனர்.
அதேநேரம், அம்பாறை, அக்கரைப்பற்றில் நீதிவான் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள், கத்தியைக் காட்டி மிரட்டி [illegible] மிரட்டித தாலிக்கொடியைக் கொள்ளையடித்திருந்தனர். (எ-இ)

## வீதி சேதத்தால் விபத்துக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.24
கோப்பாய் சந்தியின் வீதி சேதப்பட்டதால் அடிக்கடி பல விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.
அண்மையில் பெய்த மழையால் குறித்த வீதிப்பகுதி சேதமுற்று குழிகள் காணப்படுவதால், வீதியால் பயணிக்கும் மக்கள் இந்த சேதப்பட்ட பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளாகின்றனர்.
அத்துடன், கடந்த புதன்கிழமை இரவு குறித்த வீதியால் மோட்டார் சைக்கிளில் வீதியைக் கடக்க முற்பட்ட பெண் ஒருவர் தவறி விழுந்து சிறு காயங்க [illegible] ஒருவர் விபத்துக்குள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி1-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வளரட்டும் ஜீவகாருண்யம்...!

எமது முன்னோரின் வாழ்வியல் தம்மைப்போலவே பிற உயிரிகளை நேசிப்பதாகவும் இருந்தது. அதனால் தான் விலங்குகளின் நலனைக் கருத்திற்கொண்டு ஆவுரஞ்சிக்கல், தண்ணீர்த்தொட்டி என்பவற்றை ஊர் மனைகளிலும், நீர்நிலைகளை அண்டிய பகுதிகளிலும் பரவலாக அமைத்தார்கள். மாடுகள் முதலான விலங்குகள் தமது உடற்களைப்பையும், அலுப்பையும் போக்க உடலை தேய்ப்பதற்கு வசதியாகவே ஆவுரஞ்சிக் கற்கள் அமைக்கப்பட்டன. அதேபோல கோடைகாலங்களில் விலங்குகளின் தாகத்தைத் தணிக்க தண்ணீர்த்தொட்டிகளை அமைத்து, அவற்றைத் தினமும் நீரால் நிரப்பும் வழக்கமும் இருந்தது. ஆனால் இன்றைக்கு அவையெல்லாம் சிதைந்த கட்டட எச்சங்களாக மட்டுமே நிற்கின்றன.


எவ்வளவு தூரம் நாம் மாறிவிட்டோம் எம் வாழ்க்கை முறைமாறிவிட்டது, எம் கலாசாரம், பண்பாடுகள் மாறிவிட்டன என்று சிந்தித்துப் பார்க்கவேண்டிய தார்மீகக் கடமை எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இயந்திரமயமாகிப்போன வாழ்க்கை முறையும், வர்த்தகத்தை முதன்மையாகக் கொண்ட உலக ஓட்டமும் 'ஜீவ காருண்யம்' என்பதையே முற்றிலுமாகச் சிதைத்துவிட்டது. இப்படியிருக்கையில், இளைய தலைமுறையினரிடம் குறிப்பாக மாணவர்களிடம் ஜீவ காருண்யத்தை ஏற்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் தன் பணியைப் பரவலாக்கியுள்ளது 'வீ பீடர்ஸ்' (*We feeders*) என்ற அமைப்பு.

வீடற்ற விலங்குகளுக்கு உணவு வழங்குதல், விலங்குகளை வளர்ப்பதற்கு விருப்பம் உள்ளவர்களை இனங்கண்டு, அவர்களுக்குத் தேவையான விலங்குகளைச் சேர்ப்பித்தல், நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு இலவச மருத்துவச் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றைத் தன் பிரதான நோக்காகக்கொண்டு செயற்பட்டுவரும் 'வீ பீடர்ஸ்' அமைப்பானது, தற்போது மாணவர்கள் மத்தியில் ஜீவகாருண்யத்தை ஏற்படுத்தும் வகையிலும் பல்வேறு செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளது. பாடசாலைகள், அக்கடமிகள் ஆகியவற்றுக்குச் சென்று மாணவர்கள் மத்தியில் 'ஜீவ காருண்யத்தை' ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்குகளையும் பரப்புரைகளையும் அந்த அமைப்பு முன்னெடுக்கின்றது.

இவ்வாறான செயற்றிட்டங்களுக்கு வெளிநாடுகளில் பஞ்சமேயில்லை. நாய்கள், டொல்பின்கள், பென்குயின்கள் என்று ஒவ்வொரு உயிரினங்களைப் பாதுகாப்பதற்கும் தனித்தனியான அமைப்புக்கள் கூட மேற்கத்திய தேசங்களில் இயங்குகின்றன. ஆனால், அத்தகைய விழிப்புணர்வு இலங்கையில் உள்ளதா என்று கேட்டால் 'இல்லவேயில்லை' என்று மறுத்துரைக்க முடியாவிட்டாலும் 'திருப்திப்படும் வகையில் இல்லை' என்று அறுதியாகக்கூறிவிட முடியும்.

தமிழர்களாகிய நாம் கலைகள், கலாசாரங்களுடன் மட்டும் பின்னிப் பிணைந்தவர்கள் இல்லை. இந்த 'ஜீவ காருண்யம்' என்பதும் எம்முடன் இரண்டறக் கலந்ததுதான். ஆனால், இன்று அதைத் தொலைத்தபடி நாம் பயணப்பட்டுக் கொண்டிருப்பதுதான் பரிதாபகரமானது. இந்தத் திட்டங்கள் காலத்தின் தேவை. இவ்வாறான அமைப்புக்கள் அதிகளவாகத் தோற்றம் பெறவேண்டும். வாயில்லா ஜீவன்களிடம் நாம் கொள்ளும் கருணை இறை வழிபாட்டுக்கு நிகரானது. அந்தப் பழக்கத்தை எம் அடுத்த சந்ததியிடத்தில் படிப்படியாக வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. இதற்குப் பொது அமைப்புக்கள்தான் வேண்டும் என்றில்லை. எம் தனி மனித மனங்களில் எழுகின்ற இயல்பான மாற்றங்கள்கூட நாளை பெரும் விருட்சமாக மாறுவதற்கு வாய்ப்பளிக்கும்.

நிறைமாதப் பசுக்களை இறைச்சியாக்கும் சம்பவங்கள்கூட இப்போது அடிக்கடி நிகழ்வனவாக மாறிவிட்டன. இந்த உலகம் மனிதர்களுக்கானது மட்டுமல்ல. வாழ்தல் என்னும் பெரும் பயணத்தைத் தனியாக மேற்கொள்வதற்கு நாம் எவரும் இங்கு வரவில்லை. இந்தப் பூமிப்பந்தில் எமக்கிருக்கும் அதேயளவு உரிமை ஒவ்வொரு உயிரிகளுக்கும் உள்ளது. உயிர்களை நேசிப்போம், அன்பை சுவாசிப்போம்.




# இந்திய மீனவர்களது அத்துமீறலை கண்டித்து முற்றுகைப் போராட்டம்

## யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் அறிவிப்பு

**கொழும்பு, டிசெ.24**

**இந்திய இழுவைப்படகு மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து, யாழ்ப்பாணம் மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் இன்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தவுள்ளது.**

யாழ்ப்பாணம் மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று நடத்தப்பட்ட விசேட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் அன்னராசா இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாம் இராமேஸ்வரம் கடற்றொழிலாளர்களின் போராட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட வேண்டும். அவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யக்கூடாது. எங்களுடைய பகுதிக்கு வந்து தொழில் செய்யும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்யும் போது, எங்களுக்கெதிராகவும் கடற்படையினருக்கு எதிராகவும் விசமத்தனமான கருத்துக்கள் சில தமிழக மீனவர்களால் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை-இந்திய மீனவர்கள் பேச்சு என தமிழ்நாட்டு மீனவர்கள் கூறுகின்றார்கள். எம்மைப் பொறுத்தவரை மீனவர் சமூகமாகிய நாங்கள் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியபோதும் அதில் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. நாங்கள் ஏமாற்றப்படுகின்ற சமூகமாகவே காணப்படுகின்றோம்.

இதனால் யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்திலிருந்து பேரணியாகப் புறப்பட்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை முற்றுகையிடு வதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இந்தியாவில் எம்மை அவமதித்தும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவதையும் தமிழ்நாட்டு மீனவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பொய்யான முகத்தை இந்திய மத்திய மாநில அரசுகளுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காக இன்று காலை 9 மணி முதல் தீர்வு கிடைக்கும்வரை, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன் முற்றுகைப் போராட்டத்தை நடத்துவதற்கு நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.

எங்கள் முற்றத்தில் வந்து தொழில் செய்துவிட்டு, இலங்கை அரசு அதைத் தடுக்கின்றது எனக் கூறுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த போராட்டத்தில் கடற்றொழிலாளர் சங்கங்கள், அரசியல்கட்சிகள், சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம். இந்தப் போராட்டத்தில் நாம் எந்த மனுவையும் கையளிக்கப்போவதில்லை. இந்தப் போராட்டம் இந்தியாவுக்கு எதிரானது என்றோ, தமிழ் நாட்டுக்கு எதிரானது என்றோ கூறி, போராட்டத்தையும், எம்மையும் கொச்சைப்படுத்த வேண்டாம் - என்றார். (எ-26)

# திருப்பதிக்குப் பறந்த மஹிந்த குடும்பம்!

கொழும்பு, டிசெ.24

பிரதமர் மஹிந்த ராஜபக்ச இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அங்குள்ள திருப்பதி வெங்கடாசலபதி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்காகவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். இரு நாள் பயணமாக நேற்று இலங்கையில் இருந்து தனது குடும்பத்துடன் சென்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ச, திருமலையில் உள்ள ஸ்ரீகிருஷ்ணா விருந்தினர் மாளிகையில் இரவு தங்குவார் என்று கூறப்படுகின்றது. இன்று அவர் குடும்பத்தினருடன் திருப்பதி வெங்கடாசலபதி தரிசனம் மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை 25.12.2021 சனிக்கிழமை மார்கழி 10
சுபநேரம் : பி.ப. 03.26 - பி.ப. 04.56
ராகுகாலம்: மு.ப. 09.26 - மு.ப.10.56
நத்தார் தினம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தலைவர் பிரபாகரன் கல்வி அறிவு இல்லாதவராம்!

## இப்படிச் சொல்கிறார் சரத் பொன்சேகா



**கொழும்பு, டிசெ.24**

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் கல்வியறிவு இல்லாதவர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

சிங்களமொழி இணைய ஊடகம் நடத்திய அரசியல் கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாத அமைப்பில் ஆரம்பத்தில் இருந்தவர்கள் எவருக்கும் அவ்வளவாகக் கல்வியறிவு இல்லை. தமிழ் மக்களின் பிரதிநிதி கள், தனி இராஜ்ஜியம் உள்ளிட்ட வாக்குறுதிகளை வழங்கி நாடாளுமன்றத்துக்கு வந்தனர். பின்னர் இந்த வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றவில்லை. இதனாலேயே ஆயுதப் போராட்டம் ஏற்பட்டது.

நாட்டைக் கைவிட்டு வெளிநாடுக்குச் சென்றவரே அன்ரன் பாலசிங்கம். அவர் இங்கிலாந்தில் ஒரு தாதியரையே திருமணம் செய்திருந்தார். பாலசிங்கம்கூட கல்வியறிவைக் கொண்டிருந்தாரா என்பது எனக்குச் சந்தேகமே. பாலசிங்கம் போன்றுவெளி நாடுகளில் இருந்தவர்களுக்கு நாட்டில் ஏற்பட்ட இனப் பிரச்சினை சாதகமாக மாறியது. இவரைப் போன்றவர்கள் வெளிநாடுகளில் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள ஆயுதப் போராட்டங்களைத் தூண்டினார் என்று தெரிவித்திருந்தார்.

அதேவேளை, அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, ஏனைய நாடுகளில் உள்ள பீல்ட் மார்ஷல்கள் தொடர்பாகப் படித்தறிந்து அவர்களைப்போன்று நடந்து கொள்ளுங்கள் என்று சரத் பொன்சேகாவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதேநேரம், இறுதிப் போரின்போது, 23 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண தனது நூல் வெளியீட்டு நிகழ்வில், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் தனக்குள்ளேயும், தன்னைச் சுற்றியும் கடுமையான ஒழுக்கத்தைப் பேணினார். பலரும் கற்க வேண்டிய பல நல்ல பண்பு கள் அவரிடம் இருந்தன என்று கூறியிருந்தார். (எ-இ)

# கடதாசிப் பாவனையை குறைப்பதற்குத் திட்டம்



கொழும்பு, டிசெ.24


நாடாளுமன்றத்துக்குள் கடதாசிப் பாவனையைக் குறைப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள் ளது.

இது தொடர்பில் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்றம் கூடும் அனைத்து நாள்களிலும் மேசைகளில் அதிகளவிலான ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் கடதாசிகள் என்பன காணப்படுகின்றன. கடதாசிப் பாவனையைக் குறைப்பதற்கான புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பது தொடர்பில் சபாநாயகருக்கு யோசனை ஒன்று முன்வைக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கையை 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றார். (எ-இ)

# முட்டை விலையும் திடீரென அதிகரிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.24

கோழி முட்டையின் விலை திடீரென அதிகரித்துள்ளது என்று நுகர்வோர் தெரிவித்தனர்.

ஒரு முட்டை 25 ரூபா முதல் 30 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்படவுள்ள நிலையில் முட்டையின் விலை திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் தெரிவித்தனர். (எ-17)

# முட்டை விலை அதிகரிக்காதாம்!

கொழும்பு, டிசெ.24

இறக்குமதி வரியை அரசு நீக்கியுள்ளதால் முட்டையின் விலை அதிகரிக்காது என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

முட்டையின் உற்பத்திச் செலவு குறைந்துள்ளது என்றும், தற்போது முட்டை 23 ரூபா 50 சதத்துக்கு விற்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, கோழி இறைச்சியின் விலையை சுமார் 50 ரூபாவால் குறைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, தற்போது ஒரு முட்டை 25 ரூபாவில் இருந்து 30 ரூபாவரையிலும், ஒரு கிலோ கோழி இறைச்சி 800 ரூபாவில் இருந்து 900 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது என்று நுகர்வோர் கூறுகின்றனர். (எ-இ)



# நூல் வெளியீடு

சாவகச்சேரி, டிசெ.24

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய ஆசிரியை சுதேசினி புஷ்பகுமார் ஆக்கிய தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கான கேத்திரக் கணிதம் என்ற பயிற்சி நூல் நேற்று வித்தியாலய மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நூலின் முதற் பிரதியை உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் க.சண்முகதாஸ் பெற்றுக்கொண்டார். (ஒ-ரி1-9)



# கார் விபத்தில் பெண் படுகாயம்

கிளிநொச்சி, டிசெ.24

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடுப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த கார் விசுவமடுப்பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணை மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்த நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ச-113)

# தண்ணீர்க் கட்டணத்தை அதிகரிக்க நேரிடலாம்

## வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.24

எரிபொருள்களின் விலை அதிகரிப்புக் காரணமாக மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் தண்ணீருக்கான கட்டணத்தை அதிகரிக்க நேரிடும் என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

இந்த விடயம் தொடர்பாக உரிய பிரிவினருடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. எரிபொருள் விலை அதிகரிப்பு நீர் விநியோக அமைப்புக்கு ஒரு பிரச்சினையல்ல. ஆனால், மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் அது பிரச்சினையாக இருக்கும்.

மின் கட்டணம் உயர்த்தப்பட்டால், செலவினங்களை சமன் செய்ய வழிவகை செய்யவேண்டும். அதனால், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும்நுகர்வோர் தவிர்த்து, ஏனைய நுகர்வோருக்கு தண்ணீர்க் கட்டணத்தை உயர்த்துவதற்கு அமைச்சு உத்தேசித்துள்ளது. ஆயினும் குடிதண்ணீர் கட்டணத்தை அதிகரிப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை - என்றார். (எ-இ)

# மாணவர்களுக்கு தடுப்பு மருந்து




சாவகச்சேரி, டிசெ.24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6, 7 வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான தடுப்பு மருந்து, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் பாடசாலைகளில் ஏற்றப்படுகிறது.

இந்தத் தடுப்பு மருந்து ஏற்றப்படும் வேளையில் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் தமது பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஒ-ரி1-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும்நாள். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப் பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். கருத்துவேறு பாடுகள் நீங்கி சுமுக உறவு ஏற்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. குடும்பத்தில் உறவி னர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்:** சகோதரர் வகையில் எதிர் பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர் கள். உறவினர்கள் உதவியுடன் சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதக மாகமுடியும். நீண்டநாள்களாக எதிர் பார்த்த பணம் இன்று கிடைக்கும். ஏற் பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங் கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும் பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்க ளால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.


**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிக ளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டா கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணைமூலம் எதிர்பா ராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மகரம்:** கருத்துவேறுபாடு நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்னை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவை களை நிறைவேற்றுவீர்கள். உறவி னர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவிகிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உள்ளது. பொறுமை யைக் கடைப்பிடிப்பது நல்லது.



## பஞ்சாப் நீதிமன்றில் வெடிவிபத்து – மூவர் பலி!

பஞ்சாப், டிசெ.24

பஞ்சாப் மாநில நீதிமன்றில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் மூவர் பலியாகியுள்ளதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படு கிறது. பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் உள்ள கீழமை நீதிமன்றத்தில் வெடி விபத்து இடம்பெற் றுள்ளது.

இந்த வெடி விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 20க்கும் மேற்பட்டோர் படுகாயங்களு டன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதையடுத்து அம்மாநிலத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற் கொள்ளப்படுகின்றன. (ச-இ)




## அறிகுறியற்ற ஒமிக்ரோன்!

புதுடில்லி, டிசெ.24

ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 80 வீதமானோருக்கு எவ் வித அறிகுறிகளும் இல்லை என மத்திய சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. தென்னாபிரிக்காவில் தோன் றிய ஒமிக்ரோன் இந்தியாவில் பரவல் அடைந்து 213பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்தியாவில் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக் கப்பட்டுள்ளவர்களில் 80 வீதமானோருக்கு எவ்வித அறிகுறிகளும் இல்லை. 13 வீதமானோருக்கு லேசான பாதிப்புகளே காணப்படுகின் றன என மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள் ளார். (ச-இ)



## கர்நாடகா பொலிஸில் திருநங்கைகள்

கர்நாடகா, டிசெ.24

கர்நாடகா பொலிஸில் பணிபுரிய திரு நங்கைகளுக்கு வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது.

கர்நாடகா அரசு வேலைவாய்ப்பில் திருநங்கைகளுக்கும் வாய்ப்பு அளிக்க உத்தரவிடக்கோரி, 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் 'சங்கமா' தன்னார்வத் தொண்டு நிறுவனம் மனு தாக்கல் செய்திருந்தது. மனுவை விசாரித்த கர்நாடகா உயர்நீதிமன்றம், அரசு வேலைவாய்ப்பில் திருநங்கை களுக்கு வாய்ப்பளிக்க உத்தரவிட் டது. அதைத் தொடர்ந்து, கர்நாடகா பொலி ஸில் முதல்முறையாக கர்நாடகா பொலி ஸில் பணிபுரிய திருநங்கைகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பெங்களூரில் நிலநடுக்கம்

சென்னை, டிசெ.24

பெங்களூரின் நேற்றுமுன்தினம் மிதமான நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளது.

கர்நாடகா மாநிலம், பெங்களூரில் நேற்றுக்காலை 7.14 மணியள வில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 3.3ஆகப் பதிவானதாக தேசிய புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள் ளது.

எனினும் இந்த நிலநடுக்கத்தால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)





## 'ஊ சொல்றியா' சமந்தா விளக்கம்

சென்னை, டிசெ.24

சுகுமார் இயக்கத்தில் தற்போது வெளியாகியுள்ள 'புஷ்பா' படத்தில் உள்ள 'ஊ சொல்றியா...' பாட லில் நடிகை கவர்ச்சிகரமாக நட னமாடியிருந்தார்.

இந்தப் பாடலுக்கு வரவேற்பு கிடைத்துவரும் வேளையில் விமர் சனங்களும் எழுந்து வருகின் றன. இந்தநிலையில் சமந்தா அது குறித்து விளக்கமளித்துள் ளார். அதில், "நான் நல்ல குணம் கொண்ட வேடத்தில் நடித்திருக்கி றேன். மோசமான குணம் கொண்ட வேடத்தில் நடித்திருக்கிறேன். நகைச்சுவை மற்றும் உணர்வுப் பூர்வமான வேடத்திலும் நடித்தி ருக்கிறேன். நிகழ்ச்சித் தொகுப்பா ளராக இருந்திருக்கிறேன்.

நான் ஒப்புக்கொள்ளும் எல்லா வற்றிலும் சிறப்பான பங்க ளிப்பை வழங்கும் கடுமையாக உழைத்திருக்கிறேன் எனத் தெரி வித்தார். (ச-இ)


## ஒமிக்ரோன் பரவல் மோடி ஆலோசனை

புதுடில்லி, டிசெ.24

இந்தியாவில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்று வேக மாகப் பரவிவரும் நிலையில் சுகாதாரத்துறை உயர்நிலைக் குழுவுடன் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்தவுள்ளார்.

வெளிநாடுகளிலிருந்துவரும் பயணிகளிடம் கண் டறியப்பட்ட ஒமிக்ரோன் தொற்று பரவல் அடைந்து பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 213ஆக அதிகரித்துள்ளது. இந்த நிலையில், ஒமிக்ரோன் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மத் திய சுகாதாரத்துறை மற்றும் உயர் அதிகாரிகளு டன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக தரிசனம் நிறுவனத்தால் 2022ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ள உதவித்திட்டங்கள் தொடர்பாகவும், மக்களது வாழ்வாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றை முன்னேற்றக்கூடிய வினைத்திறனான செயற்றிட்டங்கள் பற்றியும் அராலிமேற்கு, ஜே/160 கிராம அலுவலர் அலுவலகத்தில் அண்மையில் கலந்துரையாடப்பட்டது. (ய-27)



கைதடி குருசாமி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பொருளாதாரம் நலிவடைந்த மாணவர்களுக்கு காலணிகள் வழங்கும் நிகழ்வு அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஈழத்து சீரடியார் அறக்கட்டளையால் 50 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கப்பட்டன. (ச- 159)



முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு புளொட் அமைப்பின் சார்பில் அதன் பொருளாளர் கந்தையா சிவநேசனால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ய-13)




மன்னார் அடம்பனைச் சேர்ந்த 'கம்பிகளின் மொழி' பிரேம் எழுதிய 'பொன்னான பரிசு' நூல் வைபவரீதியாக மாந்தைமேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள அடம்பன் பண்ணையில் வெளியிடப்பட்டது. நூலாசிரியர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் விருந்தினர்கள் இணைந்து நூலை வைபவ ரீதியாக வெளியிட்டனர். (ய-56)



சாவகச்சேரி, சங்கத்தானை, சிவன்கோவிலடி, கச்சாய்ப் பகுதிகளில் வசிக்கும், பொருண்மியம் நலிந்த, 30 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவனால் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-159)



மிருசுவில் றோ.க.த.க பாடசாலையின் ஒளிவிழா பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக செபமாலை தாசர் சபையின் ஆலோசகர் அருட்தந்தை அ.ம.ஸ்ரீபன் மற்றும் அருட்ச கோதரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-ரி1-159)




மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழா வவுனியா வை. எம்.சீ.ஏ மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
நிகழ்வில் லயன் கா. பீ. ஜெயவிந்தனுக்கு அவரது சமூக சேவையைப் பாராட்டி 'சமூக திலகம்' என்னும் விருது வழங்கப்பட்டது. (ய-...)



மழைவெள்ளம் காரணமாக தொழில் பாதிப்புக்குள்ளான சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் 162பேருக்கு உலர் உணவுப் பொதிகள் சங்கத்தால் அண்மையில் வழங்கப்பட்டன (ய-9)



மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால், வடமாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 2ஆயிரம் மீனவர் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இந்தத் திட்டத்தில், கிளிநொச்சி, பள்ளிக்குடாவில், 50 குடும்பங்களுக்கு தலா ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கப்பட்டன. பிரதேச செயலகம் ஊடாகத் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கே இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஒ-ரி1-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் உளநலம் பேணல்

## தற்கால கல்விச் செயற்பாட்டில் தவிர்க்க முடியாத தேவைப்பாடு

திருமதி பிரியதர்ஷினி அங்கசன்
ஆசிரியர்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.




சமூகத்தின் ஒரு கண்ணாடியாக விளங்குவது பாடசாலைகளாகும். மாணவர்களிடத்தில் உட்பொதிந்துள்ள உளநலம் சார் உண்மைகளையும் கூர்மையாக ஆராய வேண்டியதன் அவசியமும் தற்போது உருவாகியுள்ளமையை உணர்ந்து திறம்படச் சேவையாற்ற வேண்டிய கடப்பாடுள்ளது.

விஞ்ஞான வளர்ச்சியும் உயர்ச்சியும் பெற்ற இன்றைய சவாலான உலகம் முழுவதிலும் பல்வேறு துறைகளிலும் பல்வேறு விதமான ஆராய்ச்சிகளும், ஆய்வுகளும் இடம்பெற்ற வண்ணமேதான் உள்ளன. அந்தவகையில் உள நலம் பற்றிய அக்கறைகள் உலகம் முழுவதும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற அதேவேளையில் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உளநலம் பற்றிய கவனப்புலம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. காரணம் அது பற்றிய விழிப்புணர்வு போதாமையும் தவறான கற்பிதமும் கொண்ட சமூகப் பார்வையுமே. புதிய நூற்றாண்டில் ஏற்பட்டுவருகின்ற துரிதமாற்றங்களுக்கேற்ப அதற்கேயுரித்தான அறிகைப் புலப்பாடுகளை முதலில் கல்வி கற்றவர்கள் மட்டங்களில் உள்வாங்கிச் செரித்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகின்றது.

ஒரு பிள்ளை தனது குடும்பத்துக்கு அடுத்தபடியாக பாடசாலையிலேயே புதிய உலகத்துக்கான காலடியை எடுத்து வைக்குமிடமாக அமைகின்றது. பாடசாலைச்சூழல் என்பது பிள்ளையின் தற்போதைய நிலையை மட்டுமன்றி எதிர்கால எண்ணங்களின் தேவைகள் இலட்சியங்களை நிர்ணயிக்கும் அத்திபாரத் தளமாகவும் அமைகின்றது. இங்கு பிள்ளைகளைக் கற்பித்து ஆரோக்கிய நிலையை மேம்படுத்தி, அவர்களை நல்லவர்களாக வளர்த்து எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக உருவாக்கும் அர்ப்பணிப்பு மிக்க பணியை ஆசிரியர்கள் பொறுப்புடன் நிறைவேற்றி வருகின்றனர்.

அந்தவகையில் பாடசாலையில் எந்தவொரு பாடத்தையும் கற்பிக்கும் ஆசிரியரும் தனது மாணவனின் உள நலத்தைப்பற்றி அறிந்திருப்பது மிகமிக அவசியமாகின்றது. அதிலும் தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனா



இடர்காலத்து பாடசாலைக் கல்வி முறையில் பெரிய திருப்பத்தையும் எதிர்பார்க்கவே முடியாத சவால்களையும் தந்துள்ளது. இந்த நிலையானது உடல், உள, சமூக நலன் என்பது பற்றிய பார்வையைத் தற்போது வெகுவாக ஈர்த்துள்ளது.

### உளநலனுக்கு சவாலாக கொரோனா உருவெடுப்பு

குறிப்பாக இன்றைய இடர்காலச் சூழ்நிலையில் ஏற்கனவே உள்ள [illegible] உளநெருக்கடிகளுடன் தற்போதைய நெருக்கீட்டுப் படிமங்களும் அடுக்கப்பட்டு அதன் அழுத்தங்கள் பல்வேறு உளநெருக்கீடுகளுக்கும் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், ஏனைய கல்விசார் மற்றும் கல்விசாரா அணியினர்கூட அகப்பட்டுத் திண்டாடும் நிலையை உணரமுடிகின்றது. நீண்ட இடைவெளியின் பின்னர் பாடசாலைகள் மீள ஆரம்பித்த தற்காலச் சூழலில் கணிசமான காலப்பகுதிகளில் வீட்டில் சிறைவாசத்தை அனுபவித்து சிட்டாய் பறந்துவரும் பிள்ளைகளை அவதானித்து அவர்களிடம் போதியளவு அக்கறை காட்டுவதிலும், இழந்த கல்வியை மீட்கவும், தனித்திறன்களை வளர்த்தெடுப்பதிலும் இன்றைய நிலையில் ஆசிரியத்துறையினர் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். இன்றைய நிலையில் பிள்ளைகளுடன் உரையாடும்போது, தம்மைச் சார்ந்த பெற்றோர், பெரியோர்களின் செயற்பாடுகள் பிள்ளைகளைப் பலவிதமான உளநெருக்கீடுகளுக்கு உட்படுத்தியது மட்டுமல்லாது மன அழுத்தங்களுக்கும் உட்படுத்தியுள்ளமையை அவர்கள் வெளிப்படுத்தும் தகவல்களில் இருந்து அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையிலிருந்து தன்னை மீட்டுக் கொள்தற்காக பிள்ளைகள் பல்வேறுவிதமான பிறழ்வான நடத்தைச் செயற்பாடுகளை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர். இவ்வாறான செயற்பாடுகள் பாடசாலைக் கல்விச்சூழலில் பெரும் சவாலான நிலையை உண்டாக்கி வருகின்றது.

### உளநலப் பாதிப்பு என்பது கௌரவக் குறைச்சலல்ல

இந்தச் சூழலை அடிப்படையாகக் கொண்டு நாம் பெற்றோரை அணுகி அவர்களின் பிள்ளைகளது உளநலம்பற்றி உரையாட ஆரம்பிக்கும்போதே அவர்களின் எண்ணங்கள் எனது பிள்ளையா உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளது? உள நலம் என்பது பிள்ளையின் அன்றாட நடத்தையைப் பாதிக்கும் பிரச்சினையா? ஏன் ஆசிரியர்கள் என் பிள்ளையை இப்படிக் கூறுகிறார்கள்? என்ற பல எண்ணச் சிதறல்களுடனும் கேள்விக் கணைகளுடனும் சந்தேகப் பார்வையுடன் அவர்களது எண்ணங்கள் வேறு திசையை நோக்கிச் செல்லும் என்பதில் ஐயமில்லை. காரணம் கணிசமான பெற்றோர் மட்டுமன்றி படித்த மட்டத்தினருக்கும் தெளிவற்றவர்களாகவே இந்த விடயத்தில் உள்ளனர்.

அந்தவகையில் பாடசாலை உளவளத்துணை மூலம் மாணவர்களுக்கு மட்டுமன்றி குறித்த மாணவர்களது பெற்றோர், நண்பர்கள், சக பாடசாலை ஆசிரியர்கள், சமூக நபர்கள் இவ்வாறாக அந்த மாணவர்களுடன் நேரடித் தொடர்புபடும் அனைவரையும் வழிப்படுத்த வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியின் அடிப்படையில் நோக்கும்போது தற்போதைய இடர்காலச் சூழமைவில் கற்பிக்கின்ற ஆசிரியர் ஒவ்வொருவரினதும் பொறுப்புகள், கடமைகளின் அடிப்படையில் விரும்பியோ விரும்பாமலோ உளநலம் பற்றி அதிக வகைகூறல் இருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனினும் "கழுவிற மீனில் நழுவிற மீன் போல' ஒரு சிலரது செயற்பாடுகள் வேதனையைத் தருவதாகவும் அமைந்து விடுகின்றது.

இத்தேவைகளை அடியொற்றி பலவிதமான அபிவிருத்தி மற்றும் உளநலத் திட்டங்கள், புனர்வாழ்வுத் திட்டங்கள், சிறுவர் பாதுகாப்புத் திட்டங்கள், கிராம உதவித் திட்டங்கள் என்பனவும் இன்னும் நடைமுறையிலிருந்தே வருகின்றன. நாம் சாதாரண ஒரு வீட்டைக் கட்ட வேண்டுமானால் அத்திவாரம் சரியான முறையில் பலமாக அமைய வேண்டும்.

அதுபோலவே பாடசாலை மாணவர்களின் தனியாள் வளர்ச்சியும் விருத்தியும் சரியான முறையில் அமைய வேண்டுமானால் அவனது அடிப்படைத் தேவைகள் சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும் எமது பாடசாலைச் சூழலைப் பொறுத்தவரையில் துரதிஷ்டவசமாக நடைமுறையில் பாடசாலைகளில் கல்வி அடைவுமட்டச் செயற்பாடுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் பிள்ளையின் உளநலச் செயற்பாடுகளுக்குக் கொடுக்கின்றோமா என்ற சந்தேக எண்ணம் அடிக்கடி மனதில் தோன்றி மறைவதாக உள்ளது. அல்லது அரச சுற்றறிக்கைகளும், அறிக்கைகளுக்கும், ஆவணங்களுக்கும் மட்டுமே இதைச் செய்து பின் ஓய்வெடுப்பது போலவும் தோன்றுகின்றது. இந்நிலை முற்றுமுழுதாக மாற வேண்டும்.

### பாடசாலைச் சமூகத்தின் முன்புள்ள பொறுப்புகள்

சமூகத்தின் ஒரு கண்ணாடியாக விளங்குவது பாடசாலைகளாகும். சமூகத்தில் எத்தனையோ வகைப்பட்ட மனிதர்கள் வந்து சேர்வது போல் பாடசாலைகளிலும் எத்தனையோவிதமான மாணவர்கள் வந்து சேர்வார்கள். அந்த மாணவர்கள் சிலர் தமது இயல்புகளிலும், தேவைகளிலும் ஏனைய பிள்ளைகளிடமிருந்து சற்று மாறுபாடாகவும், வேறுபாடானவர்களாகவும் இருப்பது அவர்களின் தவறல்ல. நாம் பணியிடங்களில் எத்தனையோ வகையான மனிதர்களைச் சந்தித்தாலும் அவர்களில் சிலர் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாகவும், எதிர்பாராத விதமாகச் செயற்படுபவர்களாகவும் காணப்படும் நிலையில் பாடசாலையில் பிள்ளைகள் இவ்வாறாக மாறுபட்டும் வேறுபட்டும் இருப்பதென்பது வேடிக்கைக்குரியதாகாது. எனவே மாணவர்களிடத்தில் உட்பொதிந்துள்ள உளநலம் சார் உண்மைகளையும் கூர்மையாக ஆராய வேண்டியதன் அவசியமும் தற்போது உருவாகியுள்ளமையை உணர்ந்து திறம்படச் சேவையாற்ற வேண்டிய கடப்பாடுள்ளது. எனவே பாடசாலைகள் வெறுமனே கல்வியைப் போசிக்கும் இடமாக மட்டுமன்றி பிள்ளைகளின் கல்வி, பொ[illegible]துஅறிவு, இணைபாடவிதானச் செயற்பாடுகள், உளநல மேம்பாடு, சமூக ஒன்றிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு தளமாக அமைய வேண்டும்.

பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் இருப்பினும் அவர்களது சேவைகளை மாணவர்கள் முழுமையாகப் பெறுகின்றார்களா? அல்லது வேறு பாடசாலைத் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றார்களா? அதற்காக பொறிமுறைசார் உள்ளக வெளியக மேற்பார்வைகள் இடம்பெறுகின்றனவா? என்பதை உறுதிப்படுத்தவேண்டும். இது தொடர்பில் சகல மட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். நாளைய எதிர்கால சந்ததியினர் உடல், உள நலமான சந்ததியாக உருவாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு




யாழ். போதனா வைத்தியசாலையில் 37 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும் விடுதிச் சகோதரியாகவும், தாதியப் பரிபாலகியாகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற

திருமதி
**அனுஷபவானி சிவகுமாரன்**

அவர்களது சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன் புரிச்சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

**அங்கர் பாதுகாப்பு சேவையின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக** கடமைபுரிய விரும்புபவர்கள் பின்வரும் நாள்களில் நேர்முக தேர்விலே கலந்துகொண்டு வேலையினை பெற்றுக்கொள்ள முடியும்.

**வயதெல்லை - 22 - 60**

**சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்**
- தேசிய அடையாள அட்டை பிரதி
- பிறப்பு சான்றிதழ் பிரதி
- கிராம சேவகரின் வதிவிட சான்றிதழ்
- கல்வி தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்

**தகைமைகள்**
- உயரம் :- 5.4 inch
- மார்பு சுற்றளவு :- 32 inch

**நேர்முக தேர்வு இடம் பெறும் இடம்**
- இடம் : - இல. 114, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
- காலம் : - 27 ஆம் திகதி மற்றும் 28 ஆம் திகதி, மார்கழி மாதம் 2021
- நேரம் : - காலை 09.00 - மாலை 4.00 மணிவரை

தொடர்புகளுக்கு: **076 919 4423 / 076 216 1115**
மேலதிக தொடர்புகளுக்கு: **வவுனியா அலுவலகம்**
**076 818 1200 / 024 222 8169**
**அங்கர் பாதுகாப்பு சேவை, யாழ்ப்பாணம்.** (cs.00942) (2.6)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -19 முஸ்லீம் கல்லூரி வீதி ஆதன இல. 42 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப் பதிவேட்டில் உசன் தம்பி பெண் M.கனீபா என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு மொகமட் சுல்தான் பலீல் முகதாவில் 102ம் இலக்க 28.03.2011ம் திகதியிடப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் இல 28 ஆசாத் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த மீரான் மொகிதீன் கலீல் குறித்த ஆதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த மீரான் மொகிதீன் கலீல் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 200ம் இலக்க 30.04.2012ம் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை தியாகராசா விக்கினேஸ்வரனுக்கு அறுதியாக விற்றுள்ளார்.

**ஆதன விபரம்:-**
வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறையில் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட 19ம் வட்டாரத்தில் முஸ்லீம் கல்லூரி வீதி வரிமதிப்பு இல 42 கொண்டதும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரி.தங்கராஜா 09.03.2011ம் திகதியிடப்பட்டு அளந்து வரையப்பட்ட 4313ம் இலக்க படத்தில் துண்டு 1 எனச்சுட்டியபடி விஸ்தீரணம் குளி (1.19) ஒன்று தசம் ஒன்று ஒன்பதும் கொண்ட கடைக் கட்டிடமும் அதற்குரியவைகளும் இதன் எல்லைகள்

வடக்கு :- இப்ராகிம் ரஸிதாவின் ஆதனம்.
கிழக்கு :- குணரட்ணம் பெண் சுகந்தியின் ஆதனம்.
தெற்கு :- சதீஸ்குமார் ரஜினியின் ஆதனம்.
மேற்கு :- முஸ்லீம் கல்லூரி.

இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது தியாகராஜா விக்கினேஸ்வரன் என்பவர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது தியாகராஜா விக்கி னேஸ்வரன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப் பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை.** (cr.36785) (2.6)

# யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

## சிற்றுண்டிச்சாலை, மதிய உணவிற்கான கேள்வி அறிவித்தல்

கேள்விப்படிவங்கள் இன்று **(24.12.2021)** திகதி தொடக்கம் முற்பகல் **8.00** மணியிலிருந்து **12.00** மணிவரை பாடசாலையில் வழங்கப்படும். பூரணப் படுத்திய படிவங்களை **03.01.2022** ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

- சிற்றுண்டிச்சாலையில் பெண்கள் மட்டும் கடமையில் ஈடுபட முடியும்
- கேள்விப்பத்திரங்கள் 03.01.2021 ஆம் திகதி முற்பகல் 8.00 மணிக்குத் திறக்கப்படும்.
- மேலதிக விவரங்களைப் பாடசாலை நேரத்தில் அறிந்து கொள்ளலாம்

**தலைவர்,**
**பாடசாலை அபிவிருத்திக்குழு**
**யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி** (cr.36781) (2.6)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் **திரு.பேர்ட்டி பனிஸ்ரர்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மேரி யூலியற் மரியதாஸ்**

அவர்களின் பிரிவு செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (cr.36782B) (2.6)

**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் **திரு.பேர்ட்டி பனிஸ்ரர்** அவர்களின் பாசமிகு அன்புத் தாயார்

**திருமதி மேரி யூலியற் மரியதாஸ்**

அவர்களின் பிரிவு செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (cr.36782A) (2.6)

**ஆசிரியர் சங்கம்**
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் காணிக்கை



பிறப்பு: 03.04.1952
இறப்பு: 21.12.2021

எமது பாடசாலையின் சக ஆசிரியை **சிவவதனி** அவர்களின் அன்புத் தந்தை

**ஆனந்தம் சிவகுருநாதன்**

இறைபதம் அடைந்துள்ளார்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன் புரிச்சங்கம்,**
**பாடசாலைசமூகம்**
**யா/ நாவற்குழி**
**மகா வித்தியாலயம்** (cs41805) (2.6)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில
11 . 03 . 1940



ஆண்டவன் அடியில்
26 . 11 . 2021

அமரர் திருமதி
**வைத்திலிங்கம் சரஸ்வதி**

காரைநகர் நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும் விக்காவிலை புகுந்த இடமாகவும் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ இராமு வைத்திலிங்கம் அவர்களின் பிரிய பத்தினியும், திருநாவற்குளம் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி வைத்திலிங்கம் சரஸ்வதி அவர்கள் கடந்த (26.11.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

எமது அன்புத் தெய்வம் அமரர் திருமதி வைத்திலிங்கம் சரஸ்வதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.12.2021) வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு காரைநகர் ஆலங்கன்றடி அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக்கிருத்தியைகள் நாளைமறுதினம் (26.12.2021) ஞாயிற்றுக்கிழமை ஏகோதிஸ்ரம் சபீண்டிகரணம் காலை 9.00 மணிக்கு நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தாங்கள் தயவுடன் அழைக்கின்றோம்.

**திருநாவற்குளம்,**
**வவுனியா.** (cs.1211) (2.6)

**குடும்பத்தினர்**
**077 969 5152**

## ரயில் பயணச்சீட்டு வழங்குவதும் நிறுத்தம்

நேற்று நள்ளிரவிலிருந்து ரயில் பயணச்சீட்டு வழங்கும் நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று, ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொதிகளை பெற்றுக்கொள்ளும் பணிகளிலிருந்து நேற்றுமுன்தினம் தொடக்கம் விலகியுள்ளோம் என்று, சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளநிலையிலேயே, பயணச்சீட்டு வழங்கும் நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (த-இ)

# ஆசிரியர்கள் தேவை

**எமது கல்வி நிறுவனத்துக்கு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கற்பிக்கக்கூடிய** ஆசிரியர்கள் உடன் தேவை. கற்பித்தல் அனுபவமும் பாடசாலை ஆசிரியர்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு:
**புதிய நாவலர் கல்வி நிலையம்**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
**T.P.:077 459 8440** (cs.41819) (2.6)

# வேலையாட்கள் தேவை

கனரக சாரதி தேவை.
(Lorry) (CS 1222B)(3.6)

தொடர்பு: **076 009 4946**

# வேலையாட்கள் தேவை

யாழ். கொழும்பு A/C Bus இல் உதவியாட்கள் தேவை (CS 1222A)(3.6)

தொடர்பு: **076 009 4946**

# பெயர் மாற்றம்

**நல்லதம்பி லோகராசா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **நல்லதம்பி லோகராஜா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **நல்லதம்பி லோகராஜா** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்திகின்றேன்.

(cs.1127B) (2.6) **லோகராஜா**

# பெயர் மாற்றம்

**இராமநாதன் பூரணம்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **இராமநாதன் சறோஜினிதேவி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சாறோஜினிதேவி** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்திகின்றேன்.

(cs.1127B) (2.6) **சாறோஜினிதேவி**

# வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இராசாவின் தோட்ட வீதி சந்தியிலுள்ள கடை சகல தளபாடங்களுடன் இயங்கு நிலையில் வாடகைக்கு உண்டு

தொடர்பு: **076 7049048**
**(whatsapp) +440 777 665 5080**

# பெயர் மாற்றம்

**பொன்னையா ஜெயந்தி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **ஜெயநிதி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஜெயநிதி** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(cs 41818) (2 . 6) **பொ.ஜெயநிதி**

# பெயர் மாற்றம்

**தம்பையா அசந்தன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **தம்பையா அஜந்தன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **அஜந்தன்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(cs 1219) (2 . 6) **த.அஜந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு மோசமடைய அரசே காரணம்!

ஆளுந்தரப்பு எம்.பி. 'சேம்சைட் கோல்'

கொழும்பு, டிசெ. 24

"நாடு பெரும் நிதி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு மோசமடைந்துள்ளமைக்கு நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட அமைச்சரவையும், நிதி அமைச்சும் அதேபோல் அரச அதிகாரிகளுமே பொறுப்புக்கூறவேண்டும்" - என்று, ஆளுங்கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடி நிலைமைகள் மற்றும் அரசின் தீர்மானங்கள் குறித்து தனது நிலைப்பாட்டை ஊடகங்களிடம் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த அரசு பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை இருந்தபோதிலும் இன்றுள்ள நிலைமைகளை அவதானிக்கும்போது அவ்வாறான மறுசீரமைப்பு வேலைத்திட்டமொன்று காணப்படவில்லை.

இலங்கைக்கு என்ற ஒரு பொருளாதாரக் கொள்கையை உருவாக்கிக்கொள்ளத் தவறியுள்ளமையே நாடு உற்பத்தித்துறையில் வீழ்ச்சியடைய பிரதான காரணமாகும்.

சர்வதேச கடன்களைப் பெற்றுக்கொண்டு வெறுமனே உண்டு செலவழித்து வருகின்றோமே தவிர அவசியமான எந்தவித வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை.

நாட்டில் ஊழலும், அரச மோசடிகளும் அதிகரித்துவிட்டன. இவ்வாறான நிலையில், நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியாது. நாட்டின் அரசியல் கொள்கை எதுவாக இருந்தாலும் பொதுவான பொருளாதாரக் கொள்கை ஒன்றையே கொண்டுசெல்ல வேண்டும்" என்றார். (த-22)

# சர்வதேச நாணயநிதியத்திடம் சரணடைவதா? இல்லையா?

## முடிவு ஜனவரி 3 இல்!

கொழும்பு, டிசெ. 24

இலங்கையின் நிதி நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கு அமைச்சரவையில் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ள போதிலும், அரசுக்குள் ஒரு சில மாற்றுக் கருத்துக்கள் நிலவுகின்றன.

இதனால் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என அமைச்சரவை மட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

3ஆம் திகதி கூடும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு மத்திய வங்கி ஆளுநர் மற்றும் திறைசேரி செயலாளர் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடி நிலைமைகள் மற்றும் டொலர் பற்றாக்குறை காரணமாக நாடு எதிர்கொண்டு வரும் சிக்கல்களைக் கையாள சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே சிறந்த தீர்வாக அமையும் என்று பொருளாதார நிபுணர்கள், பொருளாதார நிபுணத்துவம் பெற்ற ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் வலியுறுத்தி வருகின்ற நிலையில் அரசு இந்த விடயத்தில் உறுதியான தீர்மானமொன்றை எடுக்காது தடுமாறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (த-22)

# அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் யாழ். டி.ஐ.ஜி. திடீர் கண்காணிப்பு

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு நேற்று திடீர் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தொடர்பில் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகள் பொதுமக்களால் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் உயர்மட்டங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பிலும் அச்சுவேலி பகுதி மக்கள் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகளின் கவனத்துக்குக்கொண்டுசென்றிருந்தநிலையில், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தார். (த-20)


## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து பிறந்த குழந்தை ஒன்றை பராமரிப்பதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

075 165 8188

## தேவை

- ஆங்கில ஆசிரியர் (பெண்)
- முகாமைத்துவ உதவியாளர் (பெண்)

திருநெல்வேலியில் இயங்கும் கல்வி நிறுவனத்துக்கு மேற்படி வெற்றிடம் உண்டு.

தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

தொடர்பு:- 077 386 7458


காணாமலாக்கப்பட்ட குடும்பத்துக்கு அச்சுறுத்தல் விடுத்த

# தென்னிலங்கையைச் சேர்ந்த மூவர் யாழ்.பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 24

காணாமலாக்கப்பட்டவர் குடும்பத்தினருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், தென்னிலங்கையை சேர்ந்த மூவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட தாயார் ஒருவரே முறைப்பாடு செய்திருந்தார். அவருடைய கணவன் காணாமலாக்கப்பட்டவர் என்று, தெரிவிக்கப்படுகின்றது. அவருடைய மகனுக்கு வெளித் தேசத்திலிருந்து பெரும் தொகை பணம் வந்திருப்பதாகவும், அதனால் இவருக்கு ஆபத்து ஏற்படும் எனவும் மகனை தம்மிடம் பாரப்படுத்தினால் அவரை தாம் பாதுகாப்போம் என்றும்கூறி, மூவர் அச்சுறுத்தல் விடுத்தனர் என்று அந்தத் தாயார் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அந்தநேரம், வீட்டில் மகன் இல்லாததால், அவர் வந்தவுடன் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு தொடர்பு இலக்கங்களை வழங்கிச் சென்றுள்ளனர். எனினும், நேற்றையதினம் குறித்த வீட்டுக்கு மூவரும் சென்றநிலையில் அச்சமுற்ற தாயார், இது தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றிருந்தார்.

அதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் மாவட்டக் குற்றத்தடுப்புப்பிரிவினர் குறித்த நபர்களை கைதுசெய்தனர். அவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் மூவரில் இருவர் தென்னிலங்கை அரசியல் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர் எனவும் ஒருவர் மனித உரிமைகள் இயக்கம் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் தனியார் அமைப்பு ஒன்றின் உத்தியோகத்தர் எனவும் தெரியவந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்கள் இன்றையதினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்ற பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-20)


# மரண அறிவித்தல்

பிறப்பு 15.12.1943

இறப்பு 22.12.2021



## திருமதி மேரி யூலியற் மரியதாஸ்

(கனகராணி)

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி யூலியற் மரியதாஸ் (கனகராணி) கடந்த (22.12.2021) புதன்கிழமையன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டோமினிக் மத்தியூஸ் - சலேற்றம்மா தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-மாகிறட் தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை சோதி மரியதாஸ் இன் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யூலியன் ஜெயசீலன் (பிரான்ஸ்), மற்றும் இக்னேசியஸ் லொயலா, அஞ்சலா மேசி, மேபிள், காலஞ்சென்ற றிச்சட் மற்றும் பெனடிக்ரா (பிரான்ஸ்), எட்மன் (பிரான்ஸ்), நிலானி (ஜேர்மன்), பிறிண்டன்ஸ் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுரேஸ் ஜயலத் (Superintendent of Customs), ஹென்ஸ்லி கியூபேட் (Research Associate Memorial University Canada), பேர்ட்டி பனிஸ்ரர் (ஆசிரியர் - யா/ புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாமலி (ஓய்வுபெற்ற தாதி), நாளினி (கனடா), அருட்செல்வி (ஆசிரியர்- யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் மனோஜ் பிரவின், கிஷானி, அக்ஷரா, ருப்திகா, நிலோஜன், நிலக்க்ஷன், ஷாலினி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (24.12.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு இரங்கல் திருப்பலி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

132, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

சுரேஸ் ஜயலத் - 077 780 2574
ஹென்ஸ்லி கியூபேட் - 001 709 746 3496
பேர்ட்டி பனிஸ்ரர் - 077 160 6077

(cs 41743) (2:6)

தகவல்:
குடும்பத்தினர்


## விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 24

வீதி விபத்தில் காயமடைந்த குடும்பத் தலைவர், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடி பகுதியைச் சேர்ந்த கோபால் சுவேஸ்காந் (வயது - 39) என்பவரே உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம், கன்னாதிட்டி சந்தியில் கடந்த 15 ஆம் திகதி, குறித்த குடும்பஸ்தர் தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. (த-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவருக்கு கண் பரிசோதனை:

## விசாரணையில் இறங்கியது மனித உரிமைகள் ஆணைக்குழு

கிளிநொச்சி, டிசெ. 24
கிளிநொச்சி கல்வி வலயத்துக் குட்பட்ட தருமபுரம் இல.02 ஆரம்ப பாடசாலை மாணவர் களுக்கு மேற்கொள்ளப்பட்ட கண் பரிசோதனை தொடர் பில், இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயம், விசாரணை களை ஆரம்பித்துள்ளது.

குறித்த பாடசாலையில் மாண வர்களுக்கு தனியார் நிறு வனம் ஒன்றினூடாக கண் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு, 71 பேருக்கு கண்பார் வையில் குறைபாடு என்றும், கண்ணாடி அணியவேண்டும் என்றும், குறித்த தனியார் நிறுவனம் கூறியுள்ளது. அது தொடர்பில் பெற்றோர் பல கேள்விகளை எழுப்பி யுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்

இது பற்றிய செய்தி வெளியா கிய நிலையில்,1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழு சட்டத் தின் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்தப் பிரேரணையின் அடிப்படை யில் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தங்களது நிர்வாகத்தின்கீழ் உள்ள பாட சாலை என்ற அடிப்படை யில், தங்களது முழுமை யான விளக்க அறிக்கை ஒன்றை இன்று வெள்ளிக் கிழமை நண்பகலுக்கு முன் னர் அனுப்பிவைக்குமாறு கோரி, கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு மனித உரிமை கள் ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது. மேலும், குறித்த பரிசோதனைக்கு தாங்கள் அனுமதி வழங்கி யிருப்பின் எந்த நியமத்தின் அல்லது தேவைப்பாட்டின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது? என்பதை யும் பெற்றோரின் சம்மதம் பெறப்பட்டமை மற்றும் சுகா தாரத் திணைக்களத்தின் ஆலோசனை பெறப்பட்டமை தொடர்பிலும் தங்களது விளக் கம் அமையவேண்டும் என் றும் ஆணைக்குழு கோரி யுள்ளது. (த)

## தனியார் காணிகளை அரசுடமையாக்கி படைகளுக்கு வழங்க திரைமறைவில் சதி

### மீள்குடியேற்றக்குழுத் தலைவர் சஜீவன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணத்தில், பாதுகாப்புத் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியார் காணி களை பகுதி 38 கீழ் அரச காணிகளாக்கி, பாதுகாப்பு தரப்பினரின் தேவைக்காக சுவீகரிக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என்று, வலி.வடக்கு மீள்குடி யேற்றக் குழுவின் தலைவர் சண்முகலிங்கம் சஜீவன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

யாழ். மாவட்டத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் தேவைக்காக பல தனியார் காணிகள் நிலஅள வைத் திணைக்களத்தால் அளவிடும் பணிகள் மேற்கொள்ளவந்த நிலையில் தடுத்துநிறுத்தப் பட்டது.

இதனை தந்திரமான முறையில் கையாள்வதற் காக காணி சுவீகரிப்பு பகுதி5 இன் கீழ் அளவிடும் காணிகளின் விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டு வந்தது.

இந்தநிலையில், மக்கள் செல்ல முடியாத உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளை அளவி டும் நோக்கில், அவை பற்றிய விவரங்களை மக்கள் பார்வையிட முடியாத வகையில் காட்சிப் படுத்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. அதுமட்டுமல்லாது, குறித்த விடயம் நடை பெற்று முடிந்ததாக பகுதி 38இன் கீழ் தனியார் காணிகளை அரச காணிகளாக்கும் முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் ஒன்றுகூடி எதிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதோடு அதனை அறிந்து கொள்ளவும் முடியாது.

ஆகவே, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் குறித்த விடயம் தொடர்பில் கரிசனை செலுத்தி, காணி சுவீகரிப்பு வர்த்தமா னியை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக் கவேண்டும் - என்று மேலும் தெரிவித்தார். (த-20)


## மரண அறிவித்தல்



பிறப்பு
10.09.1951

இறப்பு
23.12.2021

# வீரசிங்கம்
# வேலாயுதசேயோன்

(ஓய்வு நிலை கிராமசேவக அலுவலர், முன்னாள் தலைவர்
நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கம்,
அகில இலங்கை சமாதான நீதிவான்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிட மாகவும் கொண்ட வீரசிங்கம் வேலாயுதசேயோன் அவர்கள் நேற்று (23.12.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி வீரசிங்கம் இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகனும். திருமதி விமலராணியின் அன்புக் கணவரும். செந்தூரன். காலஞ்சென்ற சயிதரன். தனுஷியா. விஜிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும். சர்மிளா. சிவமோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும். புஸ்பலீலா. பத்மலீலா. காலஞ்சென்ற பாஸ்கரலீலா. பங்கயலீலா. பத்மசீலன். சிவகுமார். ரூபசேயோன் ஆகியோரின் அன்பு சகோதரனும். ஆர்வன். அவிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2021) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.30 மணியளவில்தகனக்கிரியைகளுக்காக கோண டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில் கிழக்கு
செந்தூரன் - 076 582 4669
விஜிதரன் - 076 683 7045

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும்...

எனினும், அவ்வாறு பஞ்சம் ஏற்படச் சாத்தியமில்லை என்று, தற்போதைய விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று தெரிவித்தார்.

"நாட்டில் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படத்தான்போகின்றது. எனவே, பஞ்சத்திலிருந்து மீள்வதற்கு ஒரே வழி, அனைவரும் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவதே" என்று அமைச்சர் மஹிந்த அமரவீர அழைப்பு விடுத்துள்ளார்.

அதேபோல, "நாட்டில் உணவுப் பொருள்களுக்கு பெரும் பஞ்சம் ஏற்படவுள்ளது. அந்த நிலைமையை எதிர்கொள்ளக்கூடிய முன்னேற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். பொதுமக்களும் அதற்கேற்ப சிந்தித்துச் செயற்படவேண்டும். உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளத் தற்போதே தயாராகவேண்டும்" என்று, விவசாயத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் பேராசிரியர் உதித் கே ஜயசிங்கவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், "நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது என்பதை விவசாயத்துறை அமைச்சர் என்ற வகையில் பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இரசாயன உர நிறுவனங்களின் பிரதிநிதிகளே இவ்வாறான பொய்யான அறிவிப்புகளை விடுத்துவருகின்றனர். 25 மாவட்டங்களிலுள்ள விவசாய அதிகாரிகளுடன் நான் பேச்சு நடத்தினேன். உற்பத்தி நடவடிக்கை தொடர்பில் மீளாய்வும் செய்தேன்.

உற்பத்தியில் ஓரளவு வீழ்ச்சி ஏற்படும் என்றபோதிலும், உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது. உரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது" என்று, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்தார். (த-44)

## இன்னொரு....

நாமகள் வீதியிலுள்ள அன்னர் மகேஸ்வர சிவன் கோவிலிலேயே குறித்த விக்கிரகம் காணாமற்போயுள்ளது.

குறித்த கோவிலில் வேறு தெய்வ விக்கிரகங்கள் பலவுள்ளன. எனினும், பிள்ளையார் விக்கிரகம் மாத்திரம் காணாமற்போயுள்ளது.

கடந்த 19ஆம் திகதியை அண்மித்த காலப்பகுதியில், காங்கேசன்துறைகெமுனு விகாரைக்கு முன்பாகவுள்ள பிள்ளையார் கோவிலில் இருந்த பிள்ளையார் விக்கிரகம் காணாமற்போயிருந்தது. அதனைத்தொடர்ந்து, தெல்லிப்பழை மகாஜன பாடசாலைக்கு அருகாமையிலுள்ள கோவிலில் இரு பிள்ளையார் விக்கிரகங்கள் காணாமற்போயின. பின்னர், பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவில் ஒன்றிலும் பிள்ளையார் விக்கிரகம் காணாமற்போனது. இந்தநிலையிலேயே, ஐந்தாவதாக, தெல்லிப்பழை நாமகள் வீதியிலுள்ள அன்னர் மகேஸ்வர சிவன் கோவிலிலும் பிள்ளையார் விக்கிரகம் மாயமாகியுள்ளது. தொடர்ச்சியாக பிள்ளையார் சிலைகள் காணாமல் போவது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

இது விஷமிகளின் திட்டமிட்ட செயலா? அல்லது கெமுனு விகாரைக்கு முன்னாலுள்ள குமாரகோவிலில் இருந்த பிள்ளையார் சிலை காணாமல் ஆக்கப்பட்டதை திசைதிருப்பும் நடவடிக்கையா? என்றும் அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

ஆயினும் சிலைகள் காணாமல் போவது குறித்த விசாரணைகள் தொடர்கின்றன என்று பொலிஸார் கூறுகின்றனர். (த-10)

## எந்தக்....

மற்றும் ஊழல் மோசடியற்ற கீழ்மட்டத் தலைவர்கள் எம்முடன் இணையலாம்." என்று ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது ஜே.வி.பியுடன் இணைவதென்பது புதிய விடயம் அல்ல. கூட்டணியொன்றை கட்டியெழுப்புவதற்கான அத்தனை இணக்கப்பாடுகளும் இரு கட்சிகளிடம் இருக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இன்று ஊழல்வாதிகள் இல்லை. கொலையாளிகள் இல்லை. கொள்ளையர்கள் இல்லை. சுதந்திரக்கட்சியென்பது தூய்மையான அரசியல் கட்சியாகியுள்ளது. அதேபோல தற்போதைய ஜே.வி.பியும் தூய்மையான கட்சி. கடந்தகாலம் அவசியமில்லை. எனவே, இவ்விரு தரப்புகளும் இணைந்து பயணிப்பதில் சிக்கல் இல்லை." என்று, சு.கவின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பனவே இந்தநாட்டை மாறி மாறி ஆட்சிசெய்தன. இவ்விரு கட்சிகளுமே பொருளாதாரத்தை அழித்தன. நாட்டு வளங்களை விற்பனை செய்தன. ஊழல், மோசடிகளும் தலைவிரித்தாடின. எனவேதான், இவ்விரு அணிகளையும் நிராகரிப்பதற்கு மக்கள் இன்று தயாராகிவிட்டனர். எம்முடன் அணிசேர்கின்றனர். அதற்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு நாம் தயார். எனவே, பொறுமை காக்காது அணிதிரளுமாறு மக்களை அழைக்கின்றோம். இந்த அரசை விரைவில் வீட்டுக்கு அனுப்புவோம்.

அரசால் முடியாது என்பதை அறிந்ததால்தான் சிலர் தப்பிப்பதற்கு வழி தேடுகின்றனர். இந்த நாட்டை ஆட்சிசெய்த இரு பிரதான கட்சிகளுடனும் எமக்கு அரசியல் கொடுக்கல் வாங்கல்கள் கிடையாது. சுதந்திரக்கட்சி 20 ஐ ஆதரித்தது. பாதீட்டுக்கு சார்பாக வாக்களித்தது. அமைச்சு பதவிகளை வகிக்கின்றது. ஆனால், தூய்மையான கட்சியென கூறிக்கொள்கின்றது. அவ்வாறான கட்சிகளுடன் கூட்டணி கிடையாது. இரு பிரதான கட்சிகளுடனும் நாம் உடன்படமாட்டோம்.

ஆனால், அந்தக்கட்சிகளிலுள்ள நாடு மீது பற்றுடைய, மாற்றத்தை விரும்பும் மக்களுக்கும், ஊழல், மோசடிகளற்ற கீழ்மட்ட அரசியல் தலைவர்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம். மக்களுடன்தான் எமது கூட்டணி." என்றார். (த-44)

## அழைத்தால்....

அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இ.தொ.காவின் விசேட செய்தியாளர் மாநாடு, நுவரெலியா, கொட்டகலையிலுள்ள இ.தொ.கா. அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது, 'அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் உட்பட தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளமை தொடர்பிலும், இடம்பெறும் முயற்சிகளில் பங்கேற்குமாறு இ.தொ.காவுக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளதா? 'எனவும் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஜீவன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"மேற்படி சந்திப்புக்கு இ.தொ.காவுக்கு இன்னும் அழைப்பு வரவில்லை. அதற்கான காரணம் அரசியலாக இருக்கலாம் அல்லது இளம் அரசியல்வாதிக்கு அவர்கள் அச்சப்படலாம். அழைப்பு விடுப்பதும், விடுக்காமல் இருப்பதும் அவர்களின் உரிமை. அதனைக் கட்டாயப்படுத்த முடியாது.

சம்பந்தன் ஐயா ஒரு மூத்த அரசியல்வாதி. அவர்மீது மரியாதை இருக்கின்றது. எதிர்த்தரப்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுடன் நாம் இன்றளவிலும் இணைந்து செயற்படுகின்றோம். எமக்கு ஏன் அழைப்பு விடுக்கவில்லை என்பதை நீங்கள் அவர்களிடமே கேளுங்கள்.

எமக்கு அழைப்பு விடுத்தால், சந்திப்பில் பொதுநலன் இருப்பின் நாம் பங்குபற்றுவோம். அதற்கான அழைப்பை இரண்டு வருடங்களுக்கு முன்னரே நாம் விடுத்துள்ளோம். எமக்கு அழைப்பு விடுக்கவில்லை என்பதைவிடவும் இறுதியில் எல்லோரும் ஒன்றுபட்டுள்ளமை மகிழ்ச்சியே." - என்றார். (த-44)

## விலையை....

'தவிசாளர் சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது சபையின் உறுப்பினர்களது கோரிக்கைக்கு அமைவாக இந்தப் போராட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

போராட்டக்காரர்கள் "இன்னொரு சோமாலியா போன்று இலங்கையை மாற்றாதே, அப்பாவி மக்களின் வயிற்றில் அடிக்காதே, நாங்கள் என்ன நாட்டை விட்டு வெளியேறுவதா?, வீடுகளில் குண்டுகளை வெடிக்க வைக்காதே, எரிபொருள்களின் விலையேற்றத்தைக் குறை, அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலையைக் குறை" என கோஷங்களை எழுப்பியவாறு பதாகைகளையும் ஏந்திக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுயேச்சைக்குழு ஆகியன பங்குபற்றின. ஈ.பி.டி.பி. மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன பங்குபற்றவில்லை. (த-27)

## பூநகரி....

என்ற ரீதியில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தலைமையிலான யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை நான்காம் வருட மாணவர்கள் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து கோவில் வளாகப் பகுதிகளில் அகழ்வுப்பணியை ஆரம்பித்துள்ளனர்.

தொல்லியல் திணைக்களத்தினுடைய புனர்நிர்மாணங்களுக்குப் பொறுப்பான பிரதிப்பணிப்பாளர் வருணி ஜெயதிலகவும் இந்த அகழ்வாய்வுப்பணியில் இணைந்துள்ளார். (த-113)

## கிணற்றிலிருந்து....

மீட்கப்பட்டார்.

அந்த இளைஞன், கிணற்றுக் கட்டிலிருந்து நித்திரைத் தூக்கத்தில் அவ்வாறு வீழ்ந்திருக்கக்கூடும் என்று ஆரம்பகட்ட விசாரணைகளைக்கொண்டு பொலிஸார் தெரிவித்தனர். இறப்பு விசாரணை, மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-25)

## மருத்துவ...

அடிப்படையிலேயே பயிற்சியாளர்களை நியமிக்க வேண்டுமேயன்றி, ஒரு குழுவுக்குத் தேவையான வாக்குத் தளத்தை விருத்தி செய்வதற்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக அல்ல" என்று விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சில கோரிக்கைகளை முன்வைத்து சில நாள்களாகப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## 100......

யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், ஊடகவியலாளர்களுக்கும் இடர் முகாமைத்துவப் பிரிவினருக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றுநடைபெற்றது. அந்த நிகழ்வில் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1913 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரே வருடத்தில் கிடைக்கப் பெற்ற அதிகூடிய மழைவீழ்ச்சியாக இந்த வருட மழைவீழ்ச்சி அமைந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 1913ஆம் ஆண்டு சுமார் 1840 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. 2015 ஆம் ஆண்டு 1836.5 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

ஆயினும் இந்தவருடம் இப்போதே 1963.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. இன்னும் மழைக்கான வாய்ப்புகள் உள்ளதால், மொத்தமாக 2000 மில்லிமீற்றரையும் தாண்டிய மழைவீழ்ச்சி இந்தவருடம் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இடர் முகாமைத்துவம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்ட நிலையில், 21 இடர்கள் இலங்கை இடர் முகாமைத்துவப் பிரிவால் கையாளுகின்ற விடயதானங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறுகின்ற இடர்களாக வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் மருதங்கேணி பகுதியில் இடம்பெறுகின்ற சவுக்கு காடு தீ என்பன காணப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் பாதிப்புகளாக 2008 ஆம் ஆண்டு நிஷா புயல், 2020 ஆம் ஆண்டு புரவி, 2020 ஆம் ஆண்டு நிவர், 2020 ஆம் ஆண்டு அம்பன் புயல் என்பன ஏற்பட்டன.

இந்தவருடம், யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்த அதிகூடிய மழை வீழ்ச்சியால் தொண்டைமானாறு, அரியாலை, அராலி தடுப்பணைகள் திறக்கப்பட்டு, நீர் வெளியேற்றப்பட்டபோதும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் மக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவ்வாறு, இடர் காலநிலைகளில் மக்களுக்கு முன்கூட்டியே ஏற்படும் இடர் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்காக இடர் முகாமைத்துவப் பிரிவால் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இடர் முன்னெச்சரிக்கை நிலையங்கள் ஊடாக பொதுமக்களுக்கு தகவல் வழங்குவதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 இடர் முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள் அமைக்கப்பட்டு தகவல்கள் வழங்கப்பட்டுவருகின்றன. - என்றார்.

இந்தநிகழ்வில், யாழ். பிராந்திய வளி மண்டல திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபனும் கலந்து கொண்டிருந்தார். (த-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லங்கா பிரிமியர் லீக்:

# ஜப்னா கிங்ஸ் அணி மீண்டும் சம்பியன்!



கொழும்பு, டிசெ. 24

காலி கிளாடியேட்டர் அணிக்கும் ஜப்னா கிங்ஸ் அணிக்கும் இடையிலான போட்டியில், ஜஃப்னா கிங்ஸ் அணி, 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அதன்படி, 2020 போன்று, 2021ஆம் ஆண்டுக்கான லங்கா பிரிமியர் லீக் தொடரையும் ஜப்னா கிங்ஸ் அணி நேற்றுக் கைப்பற்றியது.

இந்த இறுதிப் போட்டி, அம்பாந்தோட்டையில் நேற்றிரவு 7.30க்கு ஆரம்பமானது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஜப்னா கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதற்கமைய, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 03 விக்கெட்டுக்களை இழந்த ஜஃப்னா கிங்ஸ் அணி 201 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக அவிஷ்க பெர்னாண்டோ 63 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் காலி கிளாடியேட்டர் அணியின் சமித் படெல் 32 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 202 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய காலி கிளாடியேட்டர் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

அணிசார்பில் அதிகப்படியாக தனுஸ்க குணதிலக்க 54 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜப்னா கிங்ஸ் அணியின் வனிந்து ஹசரங்க 30 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், சதுரங்க டி சில்வா 15 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற லங்கா ப்ரீமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டியில் மோதிய அதே இரண்டு அணிகள்தான் இந்தாண்டும் இறுதிப் போட்டியில் மோதியிருந்தன. இதன்படி, ஜப்னா கிங்ஸ் இரண்டாவது முறையாகவும் லங்கா பிரிமியர் லீக் தொடரைக் கைப்பற்றியுள்ளது. (த-இ)



**A/L வரலாறு**

M. பத்மன்

B.A (History) P.G.D.E. M.A (History)

- 2023 புதிய அனுமதிகள் வழங்கப் படுகின்றன.
- 2022 வகுப்புகள் நடைபெறுகின்றன
- புதிய அனுமதிகள் பெறுவோர்க்கு மீட்டல் வகுப்புகள் நடைபெறும்

கற்பிக்கும் இடங்கள்:

D.M.I
ஆரியகுளம் யாழ்ப்பாணம்

BITSMANS
உயர்கலை கல்லூரி
குளப்பிட்டி.

(cs.1207) (2.6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுன்னாகம்,
கந்தரோடைப்பகுதியில் கணக்கர் வளவு
6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
14 அடிபாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்: காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை. விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். (தரகர் தேவையில்லை)

தொடர்பு: 077 814 7389, 077 614 7333

(cs.1220) (2.6)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

**TECHNO WORLD**

தொழில்நுட்பக் கல்லூரி

A/L தொழில்நுட்பப்பிரிவு

விசேட செயலமர்வு

A/L 2021 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரியது

26 and 27 December 2021 - பொறியியல் தொழினுட்பவியல் உயிர்முறைமைகள் தொழிநுட்பவியல்
28 and 29 December 2021 - தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
30 and 31 December 2021 - ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம், ஊடகக் கல்வி

" காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை "

அனுமதி இலவசம்

கருத்தரங்கிற்கு ஏன் சமூகமளிக்க வேண்டும்....

- 5 வருடமாக மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்....
- A/L பரீட்சை வினாத்தாள் திருத்தும் ஆசிரியர்களால் கருத்தரங்கு மேற்கொள்ளப்படுகிறது.
- பரீட்சையை எதிர்நோக்கிய வினாக்கள் அடங்கிய வினாத்தாள் கையேடுகள் விடைகளுடன் வழங்கப்படும்.

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகில் யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346

(cs.328) (2.6)

# மரண அறிவித்தல்

## மரியநாயகம்
## மேரி யோசேவ் ஸ்ரான்லி (சோதி)



மிருசுவிலை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் மேரி யோசேப் ஸ்ரான்லி நேற்று முன்தினம் (22.12.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியநாயகம் - மேரி றோஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யாகோப்பு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி யோசேப்பின் ஜெயவதி அவர்களின் பாசமிகு கணவரும், Rev.sr. ஜொய்லின் றாஜி (திருக்குடும்ப கன்னியர் சபை), Rev.sr. மரிய விஜிதா (அப்போஸ்தலிக்க கார்மேல் சபை), மேரி யூஜின் சுகி (கனடா), அனற்நிறா (பிரான்ஸ்), பஸ்ரி றஜித் (கரித்தாஸ் கியூடெக்), டொறின் டன்சி (கார்கில்ஸ் வங்கி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேரி இமல்டா, றாஜினி, லோறன்ஸ், ஆலோசியாஸ், அருள்நேசன், ஸ்றெலா கிறேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயானந்தன், நிமலறாஜ், றொஷான் ஆகியோரின் மாமனாரும், அஷ்லின், ஜலின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (24.12.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.17, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 293 3099

(cs.41808) (2.6)

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

7வது வருடமாக இடம்பெறும் மாபெரும் விசேட செயலமர்வு

A/L 2021 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கானது....

| காலம் | பாடங்கள் | நேரம் |
|---|---|---|
| டிசம்பர் 26 27 28 | பொறியியல் தொழினுட்பவியல் உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | முற்பகல் 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை |
| டிசம்பர் 29,30 | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | |
| டிசம்பர் 31 ஜனவரி 01,02 | தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல், விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம் (7), ஊடகக்கற்கை | |

இச்செயலமர்வு தொழினுட்பப்பிரிவில் 09 வருட கற்பித்தல் அனுபவமுள்ள விஸ்டத்தின் சிறப்பு ஆசிரியர் குழுவின் வழிநடத்தலில்

இறுதிப் பரீட்சையை வெற்றி கொள்ளக்கூடிய இலகு நுட்ப முறைகளுடன் பரீட்சையில் எதிர்பார்க்கும் விடயப் பரப்பை முன்னிலைப்படுத்தி

COVID-19 தாக்கத்தால் இழந்த கல்வியை ஈடு செய்யும் வகையில்

தொழினுட்பப்பிரிவின் அனைத்து பாடங்களும் நடைபெறும்.

விடயக் கையேடுகளும், எதிர்பார்க்கை வினாக்களும் கற்றலை இலகுபடுத்தும் வகையில் தொகுத்து வழங்கப்படும்.

2022 February இல் A/L பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் நடைபெறும் இச்செயலமர்வை தவறவிடாதீர்கள்.

புதிய மாணவர்களுக்கும் அனுமதிகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் மற்றும் பதிவுகளுக்கும்:-
077 248 7774 /076 552 9093 / 021 221 7860

சிரமமின்றி கையேடுகளைப் பெற்றுக் கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org